13



OFFICE OF ...
1 - OCT 1935
MADRAS

# "சித்தன்"

## ஓர் மாதாந்தப் பத்திரிகை.


| மாலை 1. | செப்டம்பர் 35. | மணி 9. |
|---|---|---|
| **Vol. 1** | **September. 35.** | **No. 9.** |


உள்ளுரை.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | வைத்தியரியல்பு ... ... | 291 |
| 2. | சிவபெருமான் கடிதம் ... ... | 294 |
| 3. | தமிழர் தொன்மை ... .... | 296 |
| 4. | செய்யுள் பகுதி ... ... | 297 |
| 5. | மாம்பழக்கவிச்சிங்கநாவலரவர்கள் | 299 |
| 6. | கல்வி பரப்புவதற்கேற்றவழி ... | 305 |
| 7. | நவீன அகராதி ... ... | 307 |
| 8. | பி. ஏ. பட்டமும்பிரதாபன் கஷ்டமும் | 309 |
| 9. | விவாகரத்து ... .... | 318 |
| 10. | விதவைகள் மறுமணக்கும்மி ... | 324 |
| 11 | ...கடம் ... ... | 326 |
| | ...பகுதி ... ... | 328 |
| | ...தி .... ... | 330 |
| | ... ... | 331 |
| | ...திகள் .... ... | 333 |
| | .... ... | 334 |


JL
ZM211, N35CN
N35·1·9.
189722

ஆசிரியர் C. P. சாமி.

# "சித்தன்"

## ஓர் மாதாந்தப் பத்திரிகை.

கல்வி, கைத்தொழில், வியாபாரம், விவசாயம், வைத்தியம், சுகாதாரம் முதலிய அரிய கட்டுரைகளுடனும், தமிழ் வைத்தியர்கட்கு பெரிதும் பயன்படும் விஷயங்களுடனும் ஆங்கிலத் திங்கள் தோறும் பழனியினின்றும் வெளிவருகிறது.

### சந்தா விபரம்.

| | | | |
|---|---|---|---|
| வருடம் 1-க்கு உள் நாடு | ... | ரூ. | 0—8—0. |
| ,, வெளி நாடு | ... | ரூ. | 1—0—0. |
| தனிப்பிரதி | ... | ரூ. | 0—1—0 |

சந்தாத் தொகையை முன்னடியே செலுத்திவிடவேண்டும். வி. பி. யில் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. எப்போது சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அவ்வருட ஜனவரி மீ -முதல் கணக்கு வைக்கப்பட்டு, ஜனவரி-மீ சஞ்சிகை முதல் பத்திரிகை அனுப்பப்படும். பதில் விரும்புவோர் தபால் முத்திரை அனுப்பவேண்டும்.

### விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| ஒரு தடவைக்கு முழுப்பக்கம் | ரூ. | 5—0—0. |
| ,, அரைப்பக்கம் | ரூ. | 3—0—0. |
| ,, கால்பக்கம் | ரூ. | 1—8—0. |

N. B:— நீடித்து விளம்பரஞ்செய்வோர் எமக்கெழுதி தெரிந்துகொள்ளவும்.

விலாசம்:— மானேஜர்,
சித்தன்
பழனி.


# "சித்தன்"
பழனி.

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்"

மாதாந்தப் பத்திரிகை.

ஆசிரியர்— C. P. சாமி.

| மாலை 1. | செப்டம்பர். 1935 | மணி 9. |
|---|---|---|


# வைத்தியரியல்பு.

தமிழ் வைத்தியமானது ஏனைய வைத்தியங்களிலெல்லாம் சிறப்புடையது என்பதை எவரும் மறுக்கமுடியாது. ஆனால் நம் தமிழ் வைத்தியர்களில் பலர் வைத்திய நூல்களின் ஆராய்ச்சிக் குறைவாலோ அல்லது அவைகளின் உட்கருத்தைச் செவ்வனே அறியாததாலோ அவர்களின் குணம், நடத்தை, நோயறியுந்தன்மை, சிகிச்சைக்கிரமம், மருந்து செய்முறை முதலியவைகளில் ஒருவர்க்கொருவர் மாறுபட்டிருக்கின்றனர். ஆங்கில வைத்தியர்களுக்குள் இவ்வித மாறுபாடுகள் அநேகமாய்க் காண்பதரிது. ஏனெனில் அவர்களுக்குக் கற்பிக்கப்படும் வைத்திய நூல், உடற்கூறு நூல், மருந்து நூல் முதலியவைகள் ஒரே தன்மையனவாகவும், அவைகள் எளிதில் அறிந்துகொள்ளுமாறும் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதையறிந்து சித்தர்களால் மறைமுகமாகக் கூறப்பட்ட வைத்திய நூல்களை அநுபவம் வாய்ந்த நம் தமிழ் வைத்திய சிகாமணிகளும் தெள்ளிய நடையில் சில நூல்கள் இயற்றி வெளியிட்டிருக்கின்றனர். இஃதேபோல் பரம்பரை வைத்தியர்களும் தங்கள் அநுபவ வைத்தியத்தைப் பரோபகாரமாக வெளியிடுவார்களானால் கற்றுக்குட்டி

189922

வைத்தியர்களுக்கும் சித்தர் நூல்களின் ரகசியத்தை அறிந்துகொள்ளும் ஆற்றலில்லாத ஏனையோர்களுக்கும் பேருபகாரமாயிருக்குமன்றோ!

ஆங்கில வைத்தியர்கள் தாம் கற்றுத்தேர்ந்ததும் அநுபவம் முதிர்ந்தவரின் கீழ் கொஞ்சக்காலமிருந்து அவரின் சிகிச்சைக்கிரமங்களைத் தெரிந்து அதைப்பின்பற்றி நடந்துவரும் மனப்பான்மை உள்ளவர்களாயிருக்கின்றனர். தமிழ் வைத்தியர்களோவென்றால் அநுபவம் வாய்ந்தவர்களிடம் மதிப்புக்காட்டி அவர்கள் அறிந்ததைத்தாம் அறியவேண்டுமென்ற ஆற்றல் இல்லாதவர்களாயும், அவ்வாறு ஆற்றல் வாய்ந்த சிலருக்கு, தாமும் தமக்குத் தெரிந்ததைக் கற்பிக்கவேண்டுமென்ற சிந்தனை இல்லாதவர்களாயுமிருக்கின்றனரேயன்றி நந்தமிழ் வைத்தியம் பரவவேண்டும், பண்டைக்காலத்தில் ஒப்புயர்வற்றிருந்த நம் நாட்டுவைத்தியமானது தற்போது தாழ்வுற்ற நிலையிலிருப்பதை உயர்த்தவேண்டுமென்னும் கருத்தில்லாதவர்களாயும் இருக்கின்றனர்.

இதனால்தான் ஒருவர் சிகிச்சையை மற்றவர் சிலாகித்துப்பேசும் வழக்கமில்லாமல் ஒருவருக்கொருவர் தாமே எல்லாம் தெரிந்தவரென்ற அகம்பாவமும், பிறர் வாழ்வுகண்டு சகியாத்தன்மையும் பொறாமையும் உடையவராயிருக்கின்றனர். இவர்கள் இவ்வாறு இருத்தலால் அவர்கள் ஏற்று நடத்தும் தொழிலில் அபிவிருத்தி அடையாமல்போவதோடு தமிழ் வைத்தியத்திற்கே அபகீர்த்தியையும் உண்டாக்கிவிடுகின்றனர். மேல்நாட்டு வைத்தியர்களின் கூட்டுறவையும் ஒற்றுமையையும், ஒருவர் சிகிச்சையை மற்றவர் ஆதரிப்பதையும் இவர்கள் அறிந்திருந்தும் இவர்கள் அதைப்பின்பற்றி நடவாதிருப்பது தமிழ்வைத்தியத்திற்கே கேடு விளைவிப்பதாகும்.

வைத்தியரின் குணத்தைப்பற்றிப் பேசும்போது அவர் மிகுந்த புத்திநுட்பமும், வியாதியைக்கண்டு அஞ்சாத தன்மையையும், அன்பும் உடையவராகி தேகம், தேசம், காலம், ரோகம், அவிழ்தம், பதார்த்தகுணம், உடம்புக்காதாரம், உதராக்கினி, உடல்பலம், ஆகாரம், கைபாகம், செய்பாகம், இன்னவியாதிக்கு இத்தனைநாள் மருந்து கொடுக்க



வேண்டுமென்ற கால அளவு முதலியவைகளை அறிந்திருப்பவரே வைத்தியராவர் என வைத்திய நூல்கள் கூறுகின்றன. ஆதலால் வைத்தியத் தொழில்புரிவோர் மேற்சொன்னவைகளைக் கவனித்து நடந்தால்மட்டும், தம்மிடம் வரும் நோயாளியைக் குணப்படுத்த இயலும். உடலிலுள்ள வாத பித்த ஐயங்கள் தன் சுபாவ நிலையைவிட்டு ஏறிக் குறைதலால் உண்டாகும் நோய்களை அதன் குறிகளால் அறிந்து இன்னவியாதியென்றும் அவ்வியாதி உண்டான காரணத்தையும் அதை நிவர்த்திக்கும் வழியையும் தெரிந்துகொள்ள வேண்டியதவசியம். ஒரு நோயாளிக்கு மருந்து கொடுக்குமுன் கவனிக்கவேண்டிய விஷயம் யாதெனில், அவன் வயதையும் வாத பித்த சிலேத்தும கோளாறுகளையும், முகத்தோற்றத்தையும், கண் பார்வையையும், அப்பியாசத்தையும் தொழிலையும், நோயுண்டாகிய காலத்தையும், தீபன சக்தியையும், மலஜல பாதையின் கிரமத்தையும், சுவாசச் செய்கையையும், நாடி நடையையும் தெரிந்துகொண்டு சிகிச்சை செய்யவேண்டும்.

வயதிற்குத்தக்கபடியும் பிணியாளன் நிலைமைக்குத்தக்கபடியும் மருந்தினளவைக் கூட்டியோ குறைத்தோ கொடுக்கவேண்டும். வாத பித்த சிலேத்தும குணங்களால் சரீரக்கூறு எவ்வாறு வேறுபடுகிறதோ அதுபோல மருந்துகளும் உடல் நிலைக்குத்தக்கபடி வித்தியாசகுணங்களைக்காட்டும். ஆதலால் அந்தந்த உடலின் நிலைமைக்குத் தக்கபடி மருந்துகளை உபயோகிக்கவேண்டியதாயிருக்கிறது. பெண்மக்களுக்கு சூதகம் கிரமமாய் காணுகிறதும் காணாததும் தெரிந்து சிகிச்சை செய்யவேண்டும். கர்ப்பிணிகளுக்கும், பாலர்களுக்கும் பால் கொடுக்கும் தாய்களுக்கும் கடினமான மருந்துகளைப் பிரயோகித்தல் கூடாது. இது விஷயத்தில் வைத்தியர்கள் மிதமாயிருத்தல கூடாது.

ஆதலால் வைத்திய சகோதரர்களே! மேற்குறித்த விஷயங்களை நாம் கையாடி அதன்படி நடந்துவருவோமானால் நம் தொழில் விருத்தியடைவதுமல்லாமல் நம் தமிழ் வைத்தியமும் சீர் சிறக்குமென்பதில் ஐயமில்லை.

ஆசிரியன்.

# "சித்தனுக்கு"
# சிவபெருமான் கடிதம்.

( R. P. ராஜன், பொருளூர். )

### அகவல்

பேரும் புகழும் பெருவாழ் நிதியும்
சீரும் திகழும் சித்தா! மகிழும்
மாசும் நீங்கி மக்கள் வணங்கி
பேசும் உனக்கென் ஆசீர்வாதம்.

இன்று உமது எழில் பத்திரிகை
நன்று! வந்தது நான் வரவேற்றதும்
எம்மை வணங்கி எழுந்த சித்தனை
அம்மை ஏற்று ஆசி கூறினள்

என் புத்திரர்கள் எனக்கெனக்கென்று
உன் பத்திரிகைக் குதைத்துக்கொண்டனர்
திடுக்கெனப் பாய்ந்து திருமிகு சித்தனை
வெடுக்கெனப் பிடுங்கி வேலன் ஓடினன்.

கொடுத்திடு எனக்கென கூறிஇவன் போய்
தடுக்கி விழுந்து தந்தமும் ஒடிந்தது!
துள்ளி இங்கிருந்து தூரத்தி ஓடியதில்
வெள்ளியங் கிரியும் வெடித்துக் கொண்டது!

அடைந்த கோபம் அளவிலையதனால்
உடைந்தது தொந்தியும் ஓ! என அழுதனன்
அம்மை அணைத்து ஆறுதல் கூறியும்
வெம்மை தணிந்திலை! என்செய நானே!

ஆனை முகத்தன் அழுது கொண்டே
பானை வயிற்றை பண்புட னசைத்து
ஆகுவின் முதுகில் அமர்ந்து உம்மிடம்
போகுவன் என்று புகன்று வந்துளன்.



ஆதலால் அவனை அன்புடன் ஏற்று
காதலால் தந்திடும் களிபெரும் உணவே!
கவனம் மிகவும் களிப்புடன் எடுக்க
அவனைப் பற்றிய தறைவன் கேண்மின்!

படைக்கும் பொருளெலாம் பக்ஷணம் நமக்கிது
கிடைக்குமென்று கேட்பவன் அவனே!
ஆகையால் தம்பியை அழைத்தே வெளியில்
போகையில் துன்பம் புகலுவன் கேண்மின்!

கடைகளி லிருக்கும் வடைகளை நமது
விடையுமிலாது விழுங்கி விடுவான்!
கரும்பை மிகவும் விருப்பி எடுத்து
திரும்பிப் பார்த்து தின்று விடுவான்

பழத்தைக் கண்டிடில் பாவம்! அவன்மிக
வளர்த்த தொந்தி வயிற்றில் சேர்ந்திடும்!
இதனால் நஷ்டம் ஈந்திடவே இருப்
பதனால் கஷ்டம் பண்புட னிருந்திடும்.

எல்லாம் உண்டு எடுத்த வயிற்றில்
பொல்லா வலியும் புகுந்து கொண்டால்
உம்மிடம் இருக்கும் உயர் மருந்துகளில்
தம்பியின் வயிற்றை தட்டிக் கொடுத்திடும்!

அம்மை மகிழுன் அரு மருந்துகளின்
செம்மையை நானும் செப்பவு முடியுமோ?
இனிவுடன் அறிவு ஏந்தும் உனக்கு
கனிவுடன் நானும் கழறுவதென்னே!

தொப்பை வயிற்றை தொங்க விடாது
உப்ப வைத்திடில் உணவைக் கொண்டே
தம்பி! உனக்கு தலையணை வேண்டின்
தொந்தி வயிற்றை துணையாய்க் கொள்ளலாம்!

அதனால் குழந்தை அடையான் கோபம்!
எதனால் என்று இயம்பி
னதனால் தானே! வாழ்க! வாழ்த்திடுமினே!
இப்படிக்கு "சித்தனின்" க்ஷேமத்தைக்கோரும்,
பரமசிவம் என்னும் சிவபெருமான்.

# தமிழர் தொன்மை.

[ சாமி, விருதை, சிவஞான யோகிகள், ]
தமிழ்ப் பிரமசூத்திராசிரியர், கோவிற்பட்டி.

| | | | |
|---|---|---|---|
| ஒண்மை<br>உண்மை | யறிவு<br>கேண்மின் | மோர்வுமிக்<br>உண்மை | கோரே<br>கேண்மின் |
| மீன்கொடி<br>ஆன்ற | படைத்த<br>பாண்டிய | மேன்மை<br>ரனைவருந் | மனுக்கள்<br>தமிழர் |
| தெற்கட்<br>நற்புகழ் | பஃறுளி<br>வடக்கண் | யாறு<br>நளிரிமை | சீர்சால்<br>யார்மலை |
| வரைதமிழ்<br>திருவிட | நாடா<br>மெனும்பே | வயங்கிய<br>ரதற்குச் | முற்கால்<br>சிறந்தது |
| பின்னா<br>உன்னவந் | ரியர்கள்<br>துகுடி | பிறங்கின்<br>யுறுமுன | னாட்டில்<br>மிங்குத் |
| தமிழ்மொழி<br>இமிழிசை | வழக்குந்<br>யைந்திணை | தகையோண்<br>இனமுந் | ணூலும்<br>தேவும் |
| போற்றவர்<br>ஆற்றருந் | யார்க்கும்<br>தளியு | பொதுச்சிவக்<br>மகத்தெண் | கோளும்<br>ணெழுத்தும் |
| நயமிகு<br>உயிர்த்திருந் | மொழுக்கமும்<br>தனவற | நனிச்சீர்த்<br>முனாற்றா | தேற்றமும்<br>சிருந்தது |
| மற்றிவை<br>சொற்ற | யாவும்<br>மொழிகள் | வான்றமிழ்ப்<br>தொகைப்படு | புலவர்<br>வேதம் |
| ஆகமம்<br>வாகய | புராண<br>லார்சொல் | மவிரிதி<br>மருளி | காசம்<br>லாங்கிலக் |
| கற்றவர்<br>தத்தர் | கற்பொரி<br>முன்னையர் | கவின்பங்<br>தம்முரை | தர்க்கார்<br>வழியால் |
| துணியப்<br>இணங்கா | பட்டன<br>நற்குல | தோன்றீ<br>மியற்றினா | ரினத்தில்<br>பின்னோர் |
| என்னவு<br>மன்னி | மொருதலை<br>யுணர்ந்து | யிவையுண்<br>மயக்கொழி | <br>வீரே. |



# செய்யுள் பகுதி.

(சாந்தன், மதுரை)

பவ்வொன்றுகவ்வொன்பான்பயந்துமவ்வஞ்சு
தவ்வஞ்சுகவ்வஞ்சுகாட்டச்சாடுவ
னவ்வொடுதவ்வுமூன்றுள்ளநாயக
னௌவியமிலன்முத்துசாமியாகுமால்.

(அழகிய சொக்கனாதபிள்ளை)

(இ-ள்) ‘ப’ ஒன்று ‘க’ ஒன்பான் பயந்து—‘ப’ என்ற வரியில் முதலாவது எழுத்தாகிய ‘ப’ வும், ‘க’ என்ற வரியில் ஒன்பதாவதுஎழுத்தாகிய ‘கை’ யும். இவைகளாலாகிய பதம் பகை ஆகும், அதாவது பகைவர்கள்; பயந்து—அஞ்சி; ‘ம’ அஞ்சு ‘த’ அஞ்சு ‘க’ அஞ்சு காட்ட—‘ம’ வரியில் ஐந்தாவதும், ‘த’ வரியில் ஐந்தாவதும், ‘க’ வரியில் ஐந்தாவதும், முறையே மு, து, கு அதாவது புறங்காட்டி ஓடும்படியாக; சாடுவன்—போர் செய்வான்; ‘ந’ ‘ஒடு ‘த’ மூன்றுள்ள நாயக—நதி; அதாவது கங்கை குலத்தில் தலைமையாக உள்ளவன்; (வேளாளரிற் சிறந்தோன்) ஒளவியமிலன்—அழுக்காறு இல்லாதவன்; முத்துசாமி ஆகும் ஆல்—முத்துசாமி என்னும் பெயரையுடையவனும் ஆகும்.

---

## தலைமகளவலப்பாங்கி தணித்தல் (அலர் கூறி.)

தொன்னாடு காக்கும் பெரிய சுவாமி சுரும்பிலுற்றூர்
மன்னு மிரவிற் றிருமால் கதிரை மறைத்ததிலே
கன்னரி யாக்கின தொன்று வளந்ததுங் கைக்குடையும்
பொன்னு னவனை யடரா யுதமும் பொருந்தினவே.

(சிவகுருநாத கவிராயர்)

(இ-ள்) தொல் நாடு காக்கும் பெரிய சுவாமி சுரும்பிலுற்றூர்—பழமையான நாட்டைப் பாதுகாத்துவரும் பெரிய சுவாமி என்னும் அரசருடைய மலையினிடத்தேயுள்ள தலைவர்; மன் ஆர் இரவில்—இருள் மிகுதியாகப் பொருந்தியுள்ள ராத்திரியிலே; திருமால் கதிரை மறைத்த அதிலே—(பாரதப்போரில்) விஷ்ணுவின் அவதாரமாகிய கிருஷ்ண மூர்த்தி ஆல்—(அர்ச்சுனனுக்காக) சூரியனை ஒளித்த திகிரி

யாகிய மூங்கில் மரத்தினிலே; கல்நாரி ஆக்கினது ஒன்றால் அளந்ததும்—(ராமாவதாரத்தில்) கல்லை அகலிகையாகச் செய்ததாகிய (விஷ்ணுவின்) திருவடியால் அளந்ததாகிய கோ (ஆகாயமும்); கைக்குடையுட—(கிருஷ்ணாவதாரத்தில்) கையில் குடையாகப்பிடித்த கல்லாகிய கோவர்த்தனகிரியும்; பொன்னுனவனை அடர் ஆயுதமும்—இரணியனைக் கொல்ல உபயோகித்த ஆயுதமாகிய நகம் (உம்); பொருந்தின— சேர்ந்திருந்தன. அதாவது மூங்கில் மரத்திலே தாமரைமலர் இருந்தது என்பது. கோகல் நகம்—கோகனகம்—தாமரை.

### கையடை கொடுத்தல்.

பேதமி லாதருண் மன்மதன் வேழம் பெருங்குலிசன்
போதக மாகிச்செண் டாயுத னூர்தி பொருமகுட
மாதன யோகினி யூர்தியைத் தாக்கினு மாதினையே
சேதன ராசன் பெரியசு வாமி சிலம்பண்ணலே.

(சிவகுருநாதக் கவிராயர்)

(இ-ள்) சேதன ராசன் பெரியசுவாமி சிலம்பு அண்ணலே—உயிர்களில் சிறந்த ராஜாவாகவுள்ள பெரியசுவாமி என்பவரின் மலையிடத்தே வாழ்கின்ற பெருமையுடையவனே! மன்மதன் வேழம்—(ஸ்த்ரீயினது கூந்தல்) மாரனுடைய யானையாகிய (இருள்—கரிய நிறமாக உள்ளது) பெரும் குலிசன் போதகம் ஆகி—பெரிய வஜ்ராயுதத்தையுடைய இந்திரனின் யானையாகிய ஐராவதத்தினுடைய வெண்மை நிறமாக மாறினாலும்; செண்டு ஆயுதன் ஊர்தி பொரு மகுடம் மாதனம்—குமரக்கடவுளின் வாகனமாகிய யானையின் (மஸ்தகங்களை) நிகர்த்தவும் மகுடத்தையும் (நிகர்த்த) பெரிய ஸ்தனங்கள்; யோகினி ஊர்தியை தாக்கினும்—காளியின் வாகனமான சிங்கமாகிய (இடையை) சேர்ந்தாலும்; மாதினை பேதம் இலாது அருள்—இந்த பெண்ணை வித்தியாசமில்லாது (எப்போதும்போல் ஒரே தன்மையாக) காத்துவருவாயாக,

அதாவது இந்தப் பெண்ணுடன் இப்போது இளமைப் பருவத்தில் அன்புடன் இருப்பதுபோலவே அவள் கரிய கூந்தல் நரைத்தும், யானையின் மஸ்தகத்தையும், மகுடத்தையும்போல் நிமிர்ந்த ஸ்தனங்கள் சரிந்து விழுந்த பருவத்திலும் ஒரே தன்மையாகப் பாதுகாக்கக் கடவாய் என்பதாம்



# திருப்பழநி, மாம்பழக்கவிச்சிங்க நாவலரவர்களும் — சீட்டுக்கவிகளும்.

வேளுக்குறிச்சி, மிட்டாதார்,

ஸ்ரீமான் வேலப்ப கவுண்டர் அவர்கள் மீது

சந்திர விலாசம் பாடியது:-

(கோவை, திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள்.)

(259-ம் பக்கத்தொடர்ச்சி)

நமது நாவலர் பெருந்தகை சோழநாட்டுக் கரூரில் சில நாள் தங்கி அங்குள்ள பிரபுக்கள்பால் பல பரிசுகள் பெற்று, அங்குநின்றும் பெயர்ந்து, கொங்கு நாட்டைச் சார்ந்ததும், "கொல்லிமலைத் தேன்சோரியுங் கோற்றவா" என்று கவிப் பெருமான் கம்பநாடரால் சிறப்பித்தோதப்பெற்ற மலைவளம் உடையதும், பெருவனப்பும், பேரதிசயமும் வாய்ந்த "கொல்லிப்பாவை" இனிதமர்ந்து விளங்கும் ஏற்றமுடையதும், 'அரப்பள்ளீசுரர்' ஆலயங்கொண்டருளும் புனித மிக்கதும், கடையெழுவள்ளல்களில் ஒருவனும், போரில் பகைவருக்கு அஞ்சாத ஆண்மை மிக்கானும், வெற்றி பெருவதே வீரரது வீறு என்னும் கடைப்பாடுடையானும், வரையாது வள்ளியோர்க்களித்து வான்புகழ் பெற்றானும், ஆகிய தகடூர் "அதிகமானது" போர்க்களமும், 'சுகவனநாதர்' கோயில்கொண்டருள்வதும்; மணிமுத்தாநதி விளங்குவதும், நாமக்கல், இராசீபுரம் முதலிய பேரூர்கள் விரவி உள்ளதுமான சேலம் ஜில்லா 'வேளுக்குறிச்சிக்குக்' காவேரியைக் கடந்துசென்று சேர்ந்தனர். இவ்வூர் இராசிபுரத்திற்கு நான்காவது மைலிலுள்ள ஓர் செழும்பதி. இப்பதி நமது நாவலர் காலத்தில் சீரும்சிறப்பும் பெற்று, இரவலர்கட்கும், புலவர்கட்குமேயன்றி இசைபாடும் சங்கீதவித்வான்கட்கும்,

பொன் விளையும் பொற்சுரங்கமாகவும், பெரும் பொக்கிஷமாகவும், திருமடந்தையும், நாமகளாரும் களிநடம்புரியும் ஆடற்சாலையாகவும் அதிமேன்மைபெற்று விளங்கியது. இத்தகைய சீரும் சிறப்பும், பேரும் பெருமையும் பெற்ற வேளுக்குறிச்சிக்கு அதிபதியாக அப்போது விளங்கியவர் ஸ்ரீமான் ந. வேலப்ப கவுண்டர் என்னும் பெரிய பிரபு. இவர் அப்பொழுது வகித்திருந்த அதிகாரம் "ஜமீன் மிட்டா" என்னும் பதவி. இப்பதவியால் வேலப்பர் பூலோக இந்திரனைப் போன்ற போகங்களை அனுபவித்து ரசிகசீலனாய் விளங்கி தன்னை வந்து யாசிக்கும் இரவலர்கட்கும், புலவர்கட்கும் இன்னிசைவல்ல சங்கீதவித்வான்கட்கும் இல்லையென்னும் சொல்லைக்கூறாது, அவரவர் தகுதியறிந்து சீர்வரிசைகளைச் சிறக்கச்செய்தனர். இதனால் இவர் புகழ் அச்சில்லா முழுதுமேயன்றி பிறவிடங்களுக்கும் பரவியிருந்தன. வேலப்பரென்பது முருகவேளுக்குரிய பெயர்களில் ஒன்று. அத்திருப்பெயரைச் சிறப்பாக இவர் கொண்டிருந்தனர். இவர் மரபு கங்கை குலத்தில் மேழிக்கொடியை விருதாக உடைய தாளாண்மைமிக்க வேளாளர் திருமரபு. இவர் அம்மரபினரென்பதற்கு "கங்காகுல விஜயகாண்டீபன்" என்றுள்ள சொற்றொடர் சிறந்த சான்றும். தந்தை பெயர் "நஞ்சைய கவுண்டர்" என்பது. தாயின் பெயர் அறியக் கூடவில்லை. கங்கை குலம் விளங்கத்தோன்றிய இக்கவின் பெருசெல்வர், பொருட்செல்வத்தை மிகுதியாகப் பெற்றிருந்தும், அவற்றின் மீது ஆசை கொள்ளாமலும், இன்றிருந்து நாளை தம்மிடத்தும் சொல்லிக்கொள்ளாமல் மறைந்தோடும் அதனை ஓர் பொருட்படுத்தாமலும், இருமாப்பு என்னும் படுகுழியில் வீழாமலும், சர்வ ஜாக்கிரதையாயிருந்து செல்வத்தை அறத்தின்பாற்படுத்தி நல்ல வழிகளில் நல்லோர்க்களித்து, நானிலப்புகழ சிறந்து விளங்கினர். இவ்வுயர் குணத்தோடு இந்நல்லார்க்குத் தெய்வபக்தியும், நல்லோரிடத்தன்பும், நிலைகொண்டிருந்தன. இவ்வுண்மை "அந்தனூர் அம்பிகை மெய்ப்பதம் சென்னிசேர்க்கும் அன்பன்" "கோலமலர் மெய்க்கருணை நெஞ்சம் விளங்கும் குகவேளிருக்கை" என்ற புகழ்மொழிகளால் உறுதிப்படுகின்றன. அந்தனூர் அம்பிகை ஆலயமும், கூவைமலைக் குமரவேள்



கோயிலும் வேளுக்குறிச்சிக்கு அண்மையிலேயே இன்றும் விளங்குகின்றன. வழிபடு தெய்வமும், குல தெய்வமும் ஆக உள்ள அக்கடவுளர்மீது நமது வேலப்ப வள்ளல் கரைகடந்த அன்பையும், காதலையுங்கொண்டிருந்தார். இவர் இளமையிலேயே தேனினும் இனிய செந்தமிழை நல்லாசிரியர்பால் பிழையறக்கற்று, அதன் இன்சுவையை இனிதுணர்ந்து, தமிழபிமான மிகுதியால் அதனை வளர்ப்பதிலும், கவிவாணர்கள் பாடும் தீந்தமிழைச் செவியாரப்பருகும் வேட்கையிலும் சிந்தை கொண்டிருந்தார். இவற்றுடன் கல்லையும் கனியச்செய்யும் இசைமயமாகிய சங்கீதத்தையும், மானிட வாழ்க்கையை நிர்ணயிக்கும் சோதிடவித்தையையும் தெளிவரக்கற்று, அவற்றின் அறிவு ஆற்றல்களால் உயர்ந்திருந்தார். இவர் செந்தமிழைத் திறம்பெறக் கற்றிருந்தார் என்பதற்கு "பாகுஞ்செந்தேனும் என ஓதும் தமிழ் தேர்ந்தருள் வேலப்ப துரை," "நெடிய கலைபயில் வேலப்பன்," தமிழ்ப்பாட்டையறி வேலப்ப பாண்டியன்" என்பவைகளும், சங்கீத சாஸ்திரத்திலும், வீணை வாசிப்பதிலும் [illegible] புலமையும், பயிற்சியும் மிக்காரென்பதற்கு

வெண்பா.

"தும்புருவு நாரதனுந் [illegible]னுபல கின்னரரும்
இம்பர்வர நாணியிருந்[illegible]னம — பைம்பொன்னெடுந்
துணைநேரும்புயவுத் துங்க[illegible]லயில்துரை
வீணைநா தங்கேட் பார் மேல்" என்றும்,

சோதிடத்தில் தேர்ந்த திறமையுள்ளாரென்பதற்கு

வெண்பா.

"வல்லா னென்றுரு மதித்திடமுக் காலமுத
லெல்லா வியல்பு மெடுத்துரைக்கு — முல்லாச
மாதிடஞ்சேர் வேலப்ப மன்னர் கணித்திட
சோதிடங்கள் யாவுமுணர்ந் து"

என்பதுமே போதிய சான்றுக்களாம்.

இவர் பெருஞ்செல்வராகவும், சீமானுமாகவும் விளங்கி அறம் வளர்த்துப் புகழ்பெருக்கி வந்தாரென்பவற்றிற்கு ''மங்காத செல்வம் உயர்வேலப்ப சீமான்,'' ''தனகுபேரன்,'' ''மஞ்சுநிகர் புண்ணியவான்'' என்பனவும்; தம்மையடுத்து யாசிக்கும் இரவலர்க்கும், புலவர்க்கும் இல்லையென்று கூறாது தகுதியறிந்து பரிசில் நல்கும் இனியாரென்பதற்கு—''தமிழ் வாணர்க்கு உபகாரா!'' ''செந்தமிழின் அருமையுணர் குண விவேகா!'' ''கலைகொண்ட வாணர்க்கவிக்கருள் வேலப்பா!'' ''வம்பிலே சென்றுழலும் வாணர்களை வன்கவியால் வெருவிடாமற் புரக்கும் வேலப்ப பாண்டியன்'' ''வடித்த தமிழ்க் கவிப்புலவோர் மனக்குறிப்பைத் தெரிந்து முகமலர்ந்தே யந்தப் படிக்குதவும் துரை நீ'' என்பனவும் வரையாது வழங்கிய வள்ளன்மைக்குக் ''கோடைக்குக் கன்னன்'' ''கைகள் கடலுண்டெழுந்தகார்'' என்பனவும் சான்றாக்களாம். இவையேயன்றி, இப்பிரபு புலவர்கள் பலர் புகழ்ந்தோதிய பாமாலைகளைப்பெற்று, அவற்றின் தகுதிக்கேற்ப பொற்குவியல்கள் அளித்து இன்சொற்புகன்று வழிவிடுவதைப் பெருமையாகவும் கைக்கொண்டிருந்தார்.

இங்ஙனம் சீரிய செல்வத்தாலும், செந்தமிழ்க்கல்வியாலும், கானவித்தையாலும், சிறந்த கொடையாலும், சீலத்தாலும், தெய்வபக்தியாலும், மிக்குயர்ந்துவிளங்கிய ஸ்ரீமான் வேலப்ப கவுண்டர் அவர்களை நமது மாம்பழக்கவிச்சிங்க நாவலரவர்கள் நேரே சென்று பேட்டி கண்டுகொள்ளாமல் வேளுக்குறிச்சியில் ஓர் இடத்தில் தங்கி, தாம் வழக்கமாய் எழுதும் மிடுக்கும், சொற்கட்டும், சந்தநலமும், பொருள் வனப்பும் மிக்குடைய சீட்டுக்கவியொன்றைச் சீர்படஎழுதிக் கையேட்டுக்காரர்மூலம் விடுத்தனர். இயல்பாகவே தமிழின் சுவையை இனிதறிந்திருந்த ஜமீன்தார் அவர்கள், செஞ்சொல்லும், மொழியழகும் நிரம்பிய அவ்வருமைமிகு சீட்டுக்கவியை உளமகிழ்ந்து ஓதிக்களிப்பெனுங்கடலில் ஆழ்ந்தனர்.



வேலப்பர் இயல்பிலேயே தமிழ்க்கு உருகும் சிந்தையரும், சீரிய புலவர்களின் திறமறிந்து, பரிசுநல்கும் செவ்வியருமானதால், நமது மாம்பழப்பாவலரது சீட்டுக்கவிக்கு பரிசாக ரூபாய் முன்னூறு வழங்கினர். இது, மருங்காபுரி ஜமீன்தார் சீட்டுக்கவியொன்றில் ''தருமவேளுக்குறிச்சிச் சத்ரபதிவேலப்பமுகிலோர் சீட்டுக்கவி தனக்கு முன்னூறுரூபா அருளினான்'' என்ற சொற்றொடரால் புலனாகின்றது. பரிசுபெற்ற புலவர் அதன்பின்னரே மிட்டாதார் தம்மை வரவேற்பாரென்ற உறுதிமேற்கொண்டு தமக்குள்ள விருதுவரிசைகளுடன் வேலப்ப முகிலைச் சென்று கண்டனர். அங்ஙனம் தம்மை நாடிவந்து பேட்டிகண்ட நாவலரவர்களது நல்வரவுக்கு பிரபு மகிழ்ந்து, எதிர்கொண்டெழுந்து உபசரித்து இருக்கை நல்கி இன்னுரை புகன்று அளவளாவினர். சிறிது நேரம் செஞ்சுவை மிக்க தீங்கவிகளால் நாவலர் வேலப்பரை மிகுதியாகப் புகழ்ந்து பாடினர். செவிக்கமுதனைய அத்திருப்பாடல்கள் தமது சிந்தையை ஒருங்கே கவர்ந்து, நாவலர்பால் பேரன்பைக்கதிக்கச்செய்தது. செய்யவே வேலப்பர் தமது அரண்மனையிலேயே தம்மோடு சிலகாலம் தங்கியிருக்கும்படி நாவலரவர்களைக் கேட்டுக்கொண்டனர். நாவலர் இதற்கு முன்னரே பல பிரபுக்கள்பால் நன்கு பழகி அவர் குணம், குறிகளையும்; அன்பு, தகுதி முதலியவற்றையும் தெளிவாக அறிந்தவரானதால் மிட்டாதாரது நெகிழ்ந்த அன்பின் வேண்டுதலுக்கு மனமுவந்து, அவர் விருப்பத்திற்கு ஏற்ப, தங்குவதாகச்சம்மதித்தனர். உடனே வள்ளல் வேலப்பர், நாவலர் வசிப்பதற்குரிய விடுதி ஒன்று அமைத்து, உண்ண, உடுக்க, படுக்க, உலாவ ஆகிய வசதிகளையெல்லாம் சிறக்கச் செய்தனர். இவ்வாறு நாவலரவர்கள் வேளுக்குறிச்சியில் நான்குமாத அளவே தங்கி இருந்ததாக யூகிக்க இடமிருக்கிறது. இந்நாலு மாதகாலங்களில் நமது நாவலர் பெருமான் தமது ஆதரணைக் கர்த்தராகிய அரும்பெரும் பிரபுவை பாவ

முதம் நிரம்பிய தமது திருவாயால் பற்பலவாறு பல கவிகளால் பாடிப்பாராட்டி உள்ளனர். அங்ஙனம் பாடிய கவிகள்:- மங்கல வாழ்த்து 2. வெண்பாக்கள் 5. சிலேடைகள் 2. உவமை விலக்குகள் 2. சோதிடத்திறமை கூறியது, வீணை வாசித்தபோது வியந்தோதியது, வேட்டைப் பெருமையைப் புகழ்ந்து பாடியது ஆக 3. "கோட்டைக்கும்-வேட்டைக்கும்; வேட்டைக்கும்-சாட்டைக்கும்; வேட்டைக்கும்-துப்பாக்கிக்கும்; யானைக்கும்-பனைமரத்துக்கும்; மலைக்கும்-வலைக்கும்; ஆக ஐந்து சிலேடைக்கவிகளும், அஷ்டநாகபந்தம், நூதன விசித்திர உபய நாகபந்தம், சதுரங்கபந்தம் ஆக மூன்று வெண்பாக்களும், ஒரு கலித்துறையும், யமகவிருத்தம் பதினொன்றும், எண்சீர்கழிநெடிலடி விருத்தம் இரண்டும், கட்டளைக் கலிப்பா ஒன்றும், உபயார்த்தமுள்ள ஆசிரியவிருத்தம் ஒன்று கட்டளைக்கலித்துறை இரண்டும், கலித்துறை மூன்றும், கொச்சகம் இரண்டும், விருத்தம் இரண்டும் ஆகநாற்பத்தேழு.

இக்கவிகள் பாடியபோதெல்லாம் பாடிய நாவலர்க்குப் பிரபு பைம்பொன்களை பரிசிலாக நல்கி, தமது மகிழ்ச்சியை அறிவித்துக்கொண்டனர். இதனிடையில் நமது மாம்பழக் கவிச்சிங்க நாவலரவர்கள் ஸ்ரீமான் வெயப்ப வள்ளலிடம் பெரும்பரிசுபெற மனதில் உட்கொண்டு, அன்று 'எட்டியாபுரம்' சமஸ்தானம் 'ஸ்ரீ எட்டப்ப துரை' அவர்கள் மீது மகா வித்வான் "கடிகைமுத்துப்புலவர்," 'சமுத்திரவிலாசம்' பாடியதுபோல இவரும் வெயப்ப துரைமீது 'சந்திர விலாசம்' என்னும் இனியதொரு பிரபந்தம் பாடினர். அப்பிரபந்தத்தின் அருமை பெருமைகளையும், கற்பனை, விற்பனம் முதலிய விளைவுகளையும் ஓதி உளமகிழ்ந்து நமது மிட்டாதார் பிரபந்தத்துக்குப் பரிசிலாக ரூபாய் இரண்டாயிரமும், சால்வை, கெண்டையுருமால், பொற்சரிகைப் பீதாம்பரம் முதலிய வரிசைகளையெல்லாம் சிறக்க நல்கி நாவலரைப் பெரிதும் பாராட்டினர். இதற்கு "தருமவேளுக்குறிச்சிச் சத்ராபதி வேலப்பமுகில் .....தகுபெட்டி வண்டிமாடருளினான்; அவன்மீது சந்திரவிலாசம் சொன்னோம்; அருகேயழைத்து ரூபா ரெண்டாயிரமும் அதிக வரிசையும் நல்கினான்" என வரும் சீட்டுக்கவியின் சொற்றொடர்களே போதிய சான்றாம்.

(தொடரும்)



## பாமர மக்களிடையே கல்வி பரப்புதற்கு ஏற்ற வழியும் சாதனங்களும்.

(T. D. சுப்பிரமணியம், கலையம்புத்தூர்.)

(286-ம் பக்கத்தொடர்ச்சி)

3. தகுந்த கக்கூஸுகள் கட்டி சாக்கடை ஜலம் சரியாக வெளிபோடி கிராமத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ளலாம்.

4. அவசியமான மருந்துகளை வாங்கி கிராமத்தாருக்குக் கொடுத்துதவலாம்.

5. பள்ளிகளில் ஆண் பெண் எல்லோரும் படிப்பதற்குப் பிரசாரம் வேண்டும். பெற்றோர்கள் குழந்தைகளை சம்பாதிக்கும் கருவிகளாய் நினைத்திருக்கும் மனப்பான்மையை மாற்றி பாலர்களை அவர்கள் முன்னேற்றத்தை உத்தேசித்து 12-வயது வரை கூலித்தொழிலுக்கு அனுப்பலாகாதென்ற கட்டுப்பாடு செய்து ஆரம்பக்கல்வியை ஆதரிக்கலாம்.

6 சட்ட அறிவில்லாதவர்களுக்கு சர்க்காரில் அவரவர்களுக்கு உண்டான உரிமைகளையும் வேண்டிய குறைகளையும் தீர்க்க கற்பிக்கலாம்.

7. கிராமசௌகரியங்களுக்காக அதாவது ரோடு, கிணறு, பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி முதலியவைகளுக்கு ஒன்று சேரும் ஊக்கத்தை உண்டுபண்ணலாம்.

8. பஞ்சாயத்துகள், கோர்ட்டு, காட்டிலாகா இவைகள் ஜனசமூகத்திற்கு நன்மையாய் வேலை செய்கின்றனவா, ஒவ்வொரு சர்க்கார் உத்தியோகஸ்தரும் ஒழுங்காய் வேலை செய்கிறார்களா என்பதைக் கவனிக்கும் உணர்ச்சியை ஜனங்களிடை உண்டுபண்ணவேண்டும்.

9. புதிய விவசாய முறைகள், கைத்தொழில் முறைகள் பரப்பவேண்டும்.

10. பெண்ணென்றும், தீண்டாதாரென்றும் தாழ்மையாய் எண்ணாமல் பொதுவாய் சுதந்திரங்களை அளித்து "சமபாவம்" என்ற மனப்பான்மை நமக்குள் ஊட்டப்படவேண்டும். சமபாவம் என்பதை நேயர்களை சரியாய் உணர வேண்டுகின்றேன்.

11. கைத்தொழில்களுடன்கூடிய இலவச ஆரம்பக் கலாசாலைகள் ஒவ்வோர் கிராமத்திலும் அமைத்தல் இன்றியமையாதது.

12. 'மாஜிக் லாண்டர்ன்' (Magic lantern) உபந்யாசங்கள், சினிமா படக்காட்சிகள், கம்பியில்லா ஆகாய சமாச்சாரங்கள் (wireless) இவைகளும் அறிவு வளர்ச்சிக்கு நல்ல சாதனங்களாகும் என்பாரும் உண்டு.

13. பொதுவாக நமக்குச் செவியின்வழியாக போதிக்கப்படும் கல்வியைவிட கண்களின் வழியாக கற்பிக்கப்படுவதே மிகவும் விரும்பப்படுகிறது. இதற்குச் சாதகமாக, விவசாயப்பொருட் காட்சிகள் முதலியவை நடைபெறவேண்டும். இவ்விஷயத்தில் அசோகரது முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது. உதாரணமாக, அவரது கல்வெட்டுகளில் "சக்ஷூதனம்" கண்காட்சிகளை மிகவும் வற்புறுத்துகிறது.

14. விவசாயக் காரிஷனும்(Demonstration train)ஒன்று இருக்கவேண்டும் என்று வற்புறுத்திக்கூறுவது கவனிக்கத்தக்கது. அதனால் ஒரு தேச மக்கள் யாவரும் பல்வேறு பாகங்களது பொருள்களையும், விஷயங்களையும் தெரிந்துகொண்டு அறிவாளிகள் ஆவதற்கும் வழியுண்டு.

15. இந்திய விஞ்ஞான சாஸ்திரிகளின் ஆராய்ச்சிகள் மக்கள் யாவருக்கும் பயன்படுமாறு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

(தொடரும்)



# நவீன அகராதி.

(ஸ்கெலிடன்)

(274-ம் பக்கத்தொடர்ச்சி)

ஆஸ்திகன் — வேண்டாப்பிறவி; கருங்கல்; பாழுங்கிணறு; அறிவை விலக்கு விற்ற பேதை, எட்டிக்காய்; விஷம்.

நாஸ்திகம் — அறிவைச்சுற்றியுள்ள அழுக்கை வடிகட்டுஞ் சல்லடை; சுயபுத்தி; பகுத்தறிவு; தேன்.

புராணம் — கற்பனை உலகம்; கர்நாடக விளையாட்டு; அண்டப்புளுகு; சாக்கடை; ஞானசூன்யம்; ஆபாசம்; குப்பை.

சடங்கு — அர்த்தமற்ற கூத்து; விளையாட்டு; விரயம்; பைத்தியம்; மானங்கெட்ட வேலை.

அபிஷேகம் — வியர்த்தம்; அறிவீனம்; சோம்பேறித்தொழில்; பாழ்; ஆற்றில் கரைத்த புளி.

பருஷன் — தாலிக்குச் சொந்தக்காரன்; மீசைக்காரன்; வெளி எஜமான்; சிப்பந்தி.

மனைவி — தாலி தரித்தவள்; மஞ்சள் பூச்சுக்காரி; வீட்டெஜமானி; சர்வாதிகாரி; காரணகர்த்தா; நிர்வாகி.

விதவை — ஆயுட்கைதி; முக்காட்டுக்காரி; சகுனத்தடை; கள்ளக்காதலி; சிசுமரண வித்து; ஒதுக்கப்பட்ட பிராணி; அனலிடை மெழுகு

ஸ்ரீதனம் — பிறந்தகத்துப்பெருமை; சண்டைக்காதாரம்; வியாஜ்யமூலம்; பெற்ற கூலி;

வரதக்ஷிணை — முன் பணம்; கலியாணக்கூலி; கப்பம்; லஞ்சம்; பணவேட்டை.

விவாகம் — தாலிகட்டுதல்; கடன்படல்; விருந்து மயம்; சடங்கு மயம்; மோட்டார் ஊர்வலம்; சங்கீத முழக்கம்; நலுங்கு பாடல்; மாமியின் தர்பார்; தாம்பூல தானம்; சோற்றுக்கூட்டம்.

பஞ்சாங்கம் — அஞ்ஞானம்; ஆபாசம்; கோணல்; செத்த பாம்பு; சக்கை; வெட்டிச்சுமை; உதவாக்கரை; சோம்பேரி ஞானம்; முள்.

வைத்தியம் — டப்பியிலடைத்தல்; விளம்பராலங்காரம்; நற்சாட்சி மூட்டை; பட்டப் பெருமை; சூத்திரம் பாடுதல்; கேட்லாக் மகிமை.

நாகரீகம் — அரை மீசை; கிராப்; கைக்கெடியாரம்; பூட்ஸ்; வெட்டு ரவிக்கை; காப்பி முதலிய பானங்கள்; சினிமா; டிராமா; பீர்; பாதி ஆங்கிலம்; சிகரெட் புகை; ஜோடி மயம்; மோட்டார் சவாரி.

விருந்து — பெரும்போடு; பக்ஷணக்குன்று; புளியேப்பம்; வயிற்றுவலி; அஜீர்ணம்; போஜனசாகரம்; தடபுடல்.

தர்மம் — காலணாக் கொடுத்தல்; கிழிந்த வஸ்திரங் கொடுத்தல்; பிடி அன்னம் போடல்; பழைய குழம்பு அளித்தல்.

காலக்ஷேபம் — மினுக்கு; தளுக்கு; கண்வெட்டுதல்; ஜாடை; காதல் வேட்டை; அம்மாமிகளின் திருச்சபை; சண்டப் பிரசண்டம்; சுக ஜீவனம்; தொந்திப் பெருக்கு.

(தொடரும்)

---


"சுசீலா"

சுகந்த வாசனைத் தைலம்.

நூதனமுறைப்படி தயாரிக்கப்பட்டது. இது கூந்தலை
கருமையாக வளரச்செய்யும். ரோமம் உதிர்தல், தலையி
உண்டாகும் பொடுகு முதலியவைகளை நீக்கும்.

புட்டி 1-க்கு விலை அணா 10.

கிடைக்குமிடங்கள்:- உமேலே K.S. ராமநாத அய்யர்,
ஷண்முகானந்த பவன் ஹோட்டல், பழனி.

பீம விலாஸ், அடிவாரம், பழனி.




# B. A. பட்டமும் பிரதாபன் கஷ்டமும்.

(S. சிவனையா, ஆசிரியர்.)

சரியாய் பகல் மணி மூன்றடித்து பத்து நிமிஷம். அச்சமயம் மேல்மாடியில் தென்றல் சில்லென வீச சன்னல் ஓரமாக ஓர் நாற்காலியின்மீது குந்தி உட்கார்ந்துகொண்டு தலையை கால்களின் இடுக்கில் பொருத்தப்பட்ட விதமாய் ஓர் வாலிபன் மிகுந்த கவலையுள்ளத்தினனாய் வீற்றிருந்தான். அவ்வமயம் வாயிலில் சித்தன், ஆனந்தபோதினி, சுதேசமித்திரன், தமிழ்நாடு பேப்பர் என்ற சத்தம் இவன் காதை துளைத்துச்சென்றது. சரேலென எழுந்துபோய் வாயில் பக்கம் நின்று தமிழ்நாடு பேப்பர் ஒன்றை விலை கொடுத்துவாங்கினான். பின், முன்பிருந்த இடத்திற்குப்போய் பேப்பரை மடமடவென்று திருப்பினான். திடீரென பேப்பரின் ஓர் பக்கத்தை ஆழ்ந்து கவனித்தவிதமாய் கொஞ்ச நேரம் மௌனம் சாதிக்கலானான். உடனே ஓர் முடிவுக்குவந்தவன் போல் தான் கூர்ந்துநோக்கிய இடத்தை கத்தரித்து எடுத்து ஜாக்ரதையாகப் பாக்கெட்டில் வைத்துக்கொண்டு ஒன்றையுங் கவனியாது வீட்டினின்று வெளியேறினான்.

வாசகர்களே! இவன் யார்? ஏன் கவலையடைந்திருக்கிறான்? ஏன் வெளியேறினான்? எங்கு செல்கிறான்? என்பதையறிய உங்களுக்கு அவா அதிகரிக்கலாம். அவசரப்படாதீர்கள். இவ்விஷயத்தை மேற்கொண்டு படிக்கப்படிக்க உண்மை விளங்கும். பொறுமையோடு மேற்செல்லுங்கள்.

இவன் வெளியேறின சின்னேரத்திற்குள் "என் கண்ணே! பகல் போஜனம் எடுத்துக்கொள்ள நேரமாகவில்லையா? ஏன் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறாய்? வேளா வேளை சாப்பிடவேண்டாமா?" என்ற சப்தத்தோடு ஓர் மெலிந்த தேகஅமைப்பும், குளிர்ந்த வதனமும் ததும்பிய அன்புங்கொண்ட ஓர் பெண்மணி மேல்மாடியில் நுழைந்தாள் அங்கு தான் நாடிவந்தவன் இல்லாது மேஜையும், நாற்காலி

களையும், இங்கிப்புட்டி, பேப்பர், பேனா முதலியவைகளையே கண்டனன். திடுக்கிட்டு நாலாபக்கமுந் தேடி, சகோதரனை மாடியிலிருந்து கீழிறங்கி தனக்குத் தெரிந்தவர்களைக் கொண்டு சில இடங்களில் பார்த்துவரும்படி அனுப்பினான். அவர்களும் அலைந்து திரிந்து வீணே வீடு திரும்பினர்.

அடுத்தநாட் காலையிலேயே வெளிச்சென்றவனைக் கண்டு பிடிக்கும் பொறுப்பை சுபநலப் புலிகளாகிய சுத்த வீரர்கள்பக்கம் தள்ளினர். (அப்புலிகள் யார்? என வாசகர்களே யூகித்தறிந்து கொள்ள விட்டுவிடுகிறேன்.) அவ் வீரப்புலிகள் தங்கள் தங்கள் முழுப்பிரயாசைகளையுங் காட்டித் தெருத் தெருவாய், சந்து சந்தாய், முற்றம் முற்றமாய்த் தேடி அறைகூவி அழைத்தும் வெளிபோனவன் கிடைத்தானில்லை. தேடுதலின் மூலம் சமாச்சாரம் நகரெங்கும் பரவவே, வெளியேறினவனின் ஆப்த நண்பனான ஆனந்தன் இச்செய்தி அறியலானான். இவ்வளவாவது துணைபுரிந்த அச்சுத்த வீரர்களுக்குப் போற்றுதல் ஒன்று அளிக்கவேண்டுமா? வேண்டாமா? வேண்டும். வேண்டும். நண்பன் ஆனந்தன் காலதாமதஞ் செய்யாது வாலிபனின் இல்லம் நண்ணி அங்கு வைக்கப்பட்டிருந்த பொருள்கள் யாவையும் ஆராய்ந்தான். ஒன்றிலும் புலனாகவில்லை. ஏதேனுங் கடிதம் எழுதி வைத்திருக்கக் கூடுமா? என்பதையுங் கூர்ந்து மேஜை முதலிய இடங்களில் கவனித்தான். அதுவுங் காணப்படவில்லை. கடைசியாகச் சலித்து, நாற்காலியில் உட்கார்ந்து யோசிக்கலானான். மேஜைமேல் கிடந்த தமிழ்நாடு பேப்பரை எடுத்துத் திருப்பினான். அதில் முதல்நாள் கத்தரித்து எடுக்கப்பட்ட இடம் "தன்னைத் துண்டித்து எடுத்தேகினனே" என்று வாய்விட்டலறுவதுபோன்று தன் கண்ணுக்குத் தென்பட்டன. யோசிக்கலானான். ஏன் கத்தரிக்கப்பட்டிருக்கிறது? அதில் என்ன விஷயம் இருந்திருக்கும்? என்றெண்ணின வண்ணமாகவே கீழிறங்கி ஒன்றையுங் கவனியாது தமிழ்நாடு ஏஜண்டிடம் சென்றான். முன்னையநாள் பேப்பர் ஒன்றை கிரயத்திற்குப் பெற்றான். வெட்டப்பட்டிருந்த இடத்தில் "தேவை! தேவை!! ஓர் குமஸ்தா தேவை!!! வைத்தியசாலைக்கென சேகரிக்கும் வேர்களை ஒழுங்குபட



அமைத்துவைக்கவும், பதங்கெடாது கவனித்துவரவும் இது போன்ற இதர வேலைக்குமாக ஓர் குமஸ்தா தேவை! வேலைக் கிரமம், சர்விஸ் முதலியவைகளை நேரில் பார்த்தறிந்து சம்பளம் போடப்படும்.

மானேஜர்,

189922

**பொறை போதன் வைத்தியசாலை,**

**கனினி, S. I. Ry.**

008

என்றெழுதப்பட்டிருந்ததைக் கண்ணுற்றான். ஆச்சரியத்தோடு தனக்குத்தானே யாதோ சொல்லிக்கொண்டு வழியே திரும்பினான்.

ஓர் நாள் நண் பகல் சுமார் ஒரு மணியிருக்கலாம். ஓர் நடுத்தரமான வயதுடைய ஒருவன் சிந்தனை தேக்கிய முகத்துடனும், தள்ளாடிய நடையுடனும் கையில் தமிழ்நாடு பத்திரிகை பிடித்துக்கொண்டு "பொறைபோதன் வைத்தியசாலை இதுதானா"? என்று வைத்தியசாலையின் முன் வாயிலில் நின்றிருந்த ஒருவரைக் கேட்டுக்கொண்டே அங்கு வந்து நின்றான். வந்தவனின் அதிர்ஷ்டவசமாக அவ்வைத்தியசாலையின் மானேஜரே வெளியில் நின்றிருந்தாராதலால் "ஆம். இதுதான். என்ன தேவை. ஐயா தயவுசெய்து சொல்லுங்கள்" என இனியமொழியில் பதில் இறுத்தனர். வந்தவன் "ஐயா, சின்னாட்களுக்கு முன்பு, இளம் வாலிபனொருவன் பிரதாபன் என்ற பெயரில் இங்கு யாரேனும் வரக் கண்டீர்களோ"? என பணிவோடு கேட்டான். "ஆம் வந்தனர். மிக்க யோக்கியமானவரென்றெண்ணி மாதம் 15-ரூபாய் சம்பளத்தில் ஓர் வேலையில் அமர்த்தியிருக்கிறேன். அவரைப் பற்றி தங்களுக்கு என்ன தேவை"? என மானேஜர் கூறி முடித்தனர். "அவரைப் பார்த்துப்போக வந்தேன் அவரை பார்க்கத் தயவுசெய்வீர்களா?" என வந்த புதியவன் இயம்பினன். "ஆஹா! அப்படியே" என இருவரும் உட்கட்டிற்குச் சென்றனர்.

அதுபோழ்து நம் கதாநாயகன் வேர்கட்டுகளை முறை முறையாகப் பிரித்துக் கட்டிக்கொண்டும், அதன்மீது பெயர்

சீட்டுகள் ஒட்டிக்கொண்டும், பீரோக்களில் வைப்பதும் எடுப்பதுமாகிய வேலைகளில் மும்முரமாகவிருந்தான். தேடி வந்த புதிய மனிதன் இக்கோலத்தைக்கண்டதும் பிரமித்துப்போனான். ஏன்? சொல்லவும் வேண்டுமா. **B.A.** பட்டம் பெற்ற ஒருவருக்கு கிடைத்த வேலையின் பெருமைதானென்னே''? என வியப்படைந்ததோடு, பிரதாபனை விளித்து வந்தவன் வினவுவானானான். என்னுயிர்த்தோழ! உன் உயரிய நேசனாகிய என்னையும், உன் அன்பின் களஞ்சியமாம் மாதாவையும் விட்டு தனியே யாவரும் உன்னைக் கூறாது நாலாபக்கமும் தேடியலையும்படி இங்குவந்தனையே'' என இயம்பும் முன்னரே, நிமிர்ந்து முகத்தை நோக்கிய நம் தலையங்கநாயகன் "என் அருமை நேசா! ஏன் வந்தனை? நம் மாதா சௌக்கியமா? இப்பொழுதும் **B. A.** பட்டத்தை நம்பி இன்னாள்வரை உத்தியோக வேட்டையில் அலைந்து அலுப்புற்று இருக்கும்போது தமிழ்நாடு பத்திரிகையில் வெளியான விளம்பரத்தைக்கண்டு இங்கு வந்து இப்புண்ணியவானிடம் இவ்வரும் பணியில் நுழைந்து வேலைசெய்து வருகிறேன். இங்கும் விடாமல் தேடி வந்தனையே'' எனத் தழுதழுத்த குரலில் மொழிந்தான்.

இவர்களின் சம்பாஷணைகளைக் கருத்தோடு கேட்டுக்கொண்டிருந்த மானேஜர் "விபரம் விளங்கவில்லையே, **B. A.** பட்டம் என்றீரே என்ன விஷயம்'' எனக் கேட்கலானார். அப்போது மானேஜரை நோக்கி "ஐயன்மீர்! என் சேதி முழுமையும் தங்களிடம் யான் சொல்லவில்லை. சொல்வதற்கும் வெட்கப்படுகிறேன். சொல்லாமலிருக்கவும் முடியவில்லை. தாங்கள் வினவுவதால் ஒருவாறு சொல்லிமுடிக்கிறேன்'' எனப் பிரதாபன் இயம்புவானானான்.

"நவ நதிகளில் ஒன்றாகிய காவிரி நதி பாயும் வளங்கள் பொருந்திய புண்ணிய பூமியாகிய ஸ்ரீரங்கத்தில் நான் பிறந்தேன். என் தந்தை மிகுந்த செல்வந்தராக இல்லாவிட்டாலும் காவிரி நதியின் பாய்ச்சலால் கதிர்கள் தலை சாயும்படி விளையக்கூடிய நன்செய் நிலங்கொஞ்சமும், நல்ல மேல் மாடிபோடுங்கூடிய அழகிய சிறியதோர் வீடும் உடையவரா



யிருந்தார். அதோடு ஒழிந்தநேரங்களில் பிரைவேட் டெக்கில் வேலையும் பார்த்து வந்தார். என்னுடன் பிறந்தார் ஒருவருமில்லாது யான் ஒருவனேயாதலால் பிரதாபன் எனப் பெயரிட்டு என்னை மிக்கச் செல்வத்தோடு வளர்த்துத் தகுந்த வயதில் பள்ளியில் வைத்தனர். யானுங் கவனத்தோடு படிப்படியாகக் கற்று திரிச்சினாப்பள்ளி உயர்தரப் பாடசாலை (High School)யில் S S. L. C. பரீக்ஷையில் முதன்மையாகத் தேர்ச்சியடைந்தேன். அதன்மேல் என் தந்தை என்னை காலேஜ் படிப்பிற்கு அனுப்ப வேண்டுமென எண்ணி சென்னை..................கலலூரிக்கு அனுப்பி வைத்தனர். என்னுடைய S.S.L.C. படிப்புடன் என் தந்தையின் கைப்பொருள் யாவும் முடிவடைந்துவிட்டபடியால் மேற்கொண்டு படிப்புக்குதவப் பொருளில்லாது வருடந்தோறும் எங்கள் குடும்பத்தை சுகமே போஷித்துக்கொண்டுவந்த நன்செய் நிலத்தை விற்கிரயஞ்செய்து அப்பணத்திலிருந்து என்னுடைய F. A. கோர்ஸ் முடிப்பதற்கு அனுப்பிவைத்தனர். அதன்மேல் என் கெட்ட காலத்தின் பயனால் என் தந்தை பரமபதம் நண்ணினார். என் தாயும் மனங் குன்றியவராய் மெய்வருந்திப் பின் ஒருவாறு தேறி எப்படியாவது **B. A.** படிப்பை முடித்துவிட்டால் ஏதாவது ஓர் உத்தியோகத்தில் இறங்கிப் பொருளீட்டிப் பிற்கால வாழ்க்கையைச் சுகமே நடத்தலாமென எண்ணி மீந்துள்ள பணத்தையும் என் B. A. பட்டத்திற்காகச் செலவழிக்கவும் தயாராயிருந்தார்.

யானும் B. A. பட்டதாரியாகி ஓர் தகுந்த உத்தியோகத்தில் அமர்ந்துகொண்டால் மிக்க உல்லாசமாக ஜீவிக்கலாம். நம்முடைய பெருவாரியான வருவாயிலிருந்து காவிரி நதியின் இரு மருங்கிலும், ஏராளமான நன்செய் நிலங்களை வாங்கிவிடலாம். நமக்குரிய காதலிகளுடன் பிளஷர்களில் நமது உத்தியோக ஆபீசுக்கும், நந்தவனங்களுக்கும், நன்செய் நிலத்திற்கும், டிராமா, சினிமா, சர்க்கஸ் முதலி ஆட்டங்களுக்கும் ஆனந்தமாகச் சென்றுவரலாமென எண்ணி எண்ணி மனப்பால் குடித்தேன். இவ்விதம் எண்ணின எனக்கு யான் எடுத்துக்கொண்ட வேலையாகிய B. A. கோர்ஸும் முடிந்தது. கைப்பொருளும் தீர்ந்தது......ஹு.....மீ

கனம் கவர்னர் அவர்கள் முன்னிலையில் B. A. பட்டமும் பெற்று எனது வீடு சேர்ந்தேன். இத்துடன் என் சரிதையின் ஒரு பாகம் தீர்ந்தது. மறுபாகத்தைப்பற்றி நினைக்கும்போதே என் மனங்குமுறுகிறது. என்செய்வேன்! அதையும் சொல்லிவிடுகிறேன்.

வீடுவந்த யான் இனி உத்தியோகம் தேடவேண்டுமேயென பல ஆபீசர்களுக்குப் பல மனுக்கள் எழுதினேன். ஒன்றிரண்டு மூன்று மாதங்களாகின. ஒரு நாளேனும் என் வாசல் பக்கம் தபால்காரன் வந்தபாடே இல்லை. எங்கள் வார்டு (தெருவு)க்கு நேமித்திருந்த தபால்காரன் மீது மிகுந்த கோபந்தான். நாம் உத்தியோகம் பெற்றுக்கொண்டு அதன்மேல் தகுந்த புத்திகற்பிக்கலாமெனப் பொறுமையோடிருந்துகொண்டேன். இனி வீணாய் வீட்டோடு வீடாய் இருந்துகொண்டு தபாலை எதிர்பார்ப்பது சரியல்லவென எண்ணினவனாய் வெளியேறிப் பெரிய மனிதர்களையும், ஆபீசர்களையும் தரிசிக்கவேண்டுமென எண்ணினேன். இவ்வாறு நினைக்கும்போதே என் மனம் படபடவென்று அடித்துப் பதைத்தது. ஏன்? கையில் காசிருந்தாலன்றோ மனம் இடங்கொடுக்கும். ஓர் ஆபீசரைப் பார்க்கவேண்டுமானால் மரியாதையாக (பூமாலை முதலிய இதர காணிக்கையுடன்) போகவேண்டாமா? பிளஷர் வேண்டாமா? இவைகளுக்குப் பணம் ஏது; இல்லை. யோசனை ஒன்று உதித்தது. என் மேல்மாடி வீட்டை வைத்தேன் ஆயிரம் ரூபாயுக்கு ஒத்தி. அதில் குடிக்கூலிக்கு நாங்கள் இருப்பதாக வாடகைப்பத்திரம் பலமாக முடித்து வைத்துக்கொண்டேன். ரூபாய் ஆயிரத்தையும் பெற்றுக்கொண்டேன். தனி பிளஷர் ஒன்றெடுத்தேன் ஒரு பெரியவரின் கொடுக்கைப்பிடித்து அதில் உட்கார வைத்தேன். கொஞ்சநேரத்திற்குள் ஓர் ஆபீசரின் ஜாகையில் ஆபீசருடன் பேசத்தயாரானேன். உடன் வந்த பெரியாரும் என்னைப்பற்றி ஆபீசரிடம் இதமான உபதேசங்கள் அளந்துகொட்டி.........ஓர் வேலைபோட்டுத்தருப்படி கேட்டுக்கொண்டார். ஆபீசரும் ஒப்புக்கொண்டதற்கு அறிகுறியாக தலையையும், கைகளையும் அசைத்ததோடு சந்தோஷக் குறியையுங்காட்டினார். பின்புகுட்பை(Good Bye)சொல்லிப்



புறப்பட்டோம். உடனே யாதோ மறந்து விட்டவன்போல் நடித்து யான் தனியே ஆபீசடரிம் சென்று மிகுந்த வணக்கமாக நூறுரூபாயுள்ள ஓர் பச்சைநோட்டைக் கொடுத்து என் வாய் பூராவும் திறந்து காட்டினேன். அவரும் அதற்குப் பதிலாகச் செய்கிறேன் செய்கிறேன் என்று சொல்லி நோட்டைப் பெற்றுக்கொண்டு வீட்டினுள் நுழைந்தார். யானும் பெரியவரும் காரினுள் நுழைந்தோம். கார் என் வீட்டுப்பக்கம் நின்றது.

மாதமோ மூன்றாயிற்று, நான்காயிற்று, 5, 6, 7 - மாதமும் கடந்தது. ஒன்றும் முடிந்தபாடில்லை. இதற்குள் அவ்வாபீசரும் மாற்றப்பட்டனர். இதென்ன நம் தலைவிதியென்று பின்னும் பல ஆபீசர்களையும் குமஸ்தாக்களையும் கண்டு பேசினேன். காணிக்கைகளாகிய மரியாதைகளும் செலுத்தினேன். இத்தருணத்தில் என்னை ஒருவர் குறிப்பாகக் கவனித்துவந்திருப்பாரேயானால் S. I. Ry. க்கு ஓர் ஏஜண்டோ என சந்தேகிக்கும்படியிருந்திருக்கும். ஏன்? யான் ஏறாத ட்ரெயின் உண்டா? இறங்காத ஸ்டேஷன் உண்டா? நான் சதா புகைவண்டிச் சவாரி செய்தனனன்றோ, பின்னும் எத்தனைவிதமான மோட்டார், எத்தனை ஜட்கா இவைகள் என் வீட்டின் பக்கம் ஓயாது நின்றுகொண்டிருக்கும். எதற்கென்று கேட்காதீர்கள். உங்களுக்குத்தான் தெரியுமே. நான் பாராத ஆபீசருண்டா? குமஸ்தாக்களுண்டா? என் கைகள் தொடாத பூமாலைகளுண்டா ஐயோ! அவைகளை நினைக்க நினைக்க மனம் பதறுகிறதே. இந்த ஆர்ப்பாட்டத்தில் அடைந்த பலன்தான் என்னே? வீட்டை ஒத்திவைத்துப் பெற்ற ரூபாய் ஆயிரத்தையும் இழந்து "குந்தினையே குரங்கே" என உட்கார்ந்ததேயாகும். மிருக வேட்டைக்குச்சென்றவர்கள் திரும்பிவரும்போது ஒன்றுங் கிடைக்காதுபோயினும் ஓணானவது கொண்டுவருவார்களே. உத்தியோகவேட்டையாடிய யான் என்ன பயனடைந்தேன். ஐயோ! பாபமே!! யான் இப்பாழும் B. A. பட்டம்பெற்றது இப்படியா ஆகவேண்டுமெனப் பெருஞ்சிந்தனையோடு என் மேல் மாடியில் ஓர் நாள் உட்கார்ந்துகொண்டிருந்தேன்.

அப்பொழுது கிடைத்த தமிழ்நாடு பத்திரிகையில் தாங்கள் செய்திருந்த விளம்பரத்தைக்கண்டு இங்கு வந்தனன். தங்களிடத்தில் என் B. A. பட்டத்தின் பெருமையைச் சொன்னால் தாங்கள் எங்கு இவ்வளவு படிப்பாளி எனக்குத் தேவையில்லையென்றும், இவ்வேலையில் கவனஞ்செலுத்த மாட்டீரென்றும் சொல்லிவிடுவீர்களோ எனப்பயந்தவனாய், தாங்கள் கேட்ட கேள்விக்கு ஆங்கிலத்தில் எழுதப்படிக்கக் கொஞ்சம் தெரியும் என்று சொல்லிக்கொண்டேன். என் கெட்டகாலம் இச்சிறுவயதில் எந்தந்தையை எமனுக்குப் பரிகொடுத்தும், என்னை நயந்த தாயையும், இங்கு நிற்கும் இச்செல்வ நேசனையும் (ஆனந்தன்) மறந்து பிரியும்படிக்கும் என்னின்ப வாழ்க்கை துன்ப வாழ்க்கையாக மாறும்படிக்கும் செய்தது இப் B. A. பட்டமன்றோ? இனி என்செய்வேன் தாங்கள் தான்..........'' என்று கண்ணுங் கண்ணீருமாகச் சொல்லி முடித்தான்.

யாவும் விடாதுகேட்டுக்கொண்டிருந்த மானேஜரின் மனமும் மதியும் ஒருங்கே வாட்டமடைந்தது. ஒன்றுந் தோன்றாதவராய் ஐந்து நிமிஷம் பதுமைபோலானார். பின்பு சிலமொழிகள் சொல்லலுற்றார்:—

உலகின்கண் மக்களுக்கு செல்வப் பொருள் கல்விப் பொருளென, இரு பொருள்களிருப்பினும் அழியாப்பொருளாகிய கல்வியைத் தேடவேண்டியது அவசியந்தான். அக் கல்வி கற்றலின் நோக்கமானது அறிவு முன்னேற்றங்கருதியும், தொழில் முன்னேற்றங்கருதியும் இருக்கவேண்டுமே ஒழிய - பட்டம் பதவிகளை விரும்பி (நம்பி) கைப்பொருளையுமிழந்து பின் அலைவதற்கான முறையில், கல்விகற்கப்புகுவது பேதமையாகும். அளவு கடந்து செலவழித்து பின் அவதிகளடையும் அறிவீனர்களுக்கன்றோ "ஆனமுதலில் அதிகம் செலவானால். மானமழிந்து மதிகெட்டு... ...



.... ... .... ...பொல்லனும் நாடு'' என்ற முதியோர் முதுமொழி பொன்போல் பொலிவுறுகிறது. ஐயனே! நீர் நும் நிலையை அறிந்து படிப்பை போதுமளவு கற்று அத்துடன் உன் பழுதிலாதுழுதொழில் வாழ்க்கையிலிறங்கி இருப்பின் உனது வாழ்வு எவ்வளவு சீரும் சிறப்பும் பெற்றிலங்கும். அவ்வாறின்றி பட்டம்பெற நினைத்து நும் நன்செய் நிலத்தையும், பதவிகொள்ளும் ஆசையிலுன்னழகிய மனையையும் தோற்றாயன்றோ? இனி என் செய்வது. நும் நிலையை அறிந்தவர்கள் இனியேனும் உத்யோகத்திற்கென்றே பயின்று பட்டதாரிகளாகிகெட்டலையாது முன்னறிவோடு நடந்துகொள்வார்களாக' எனக்கூறி முடித்தனர்.

பின்பு பிரதாபனின் பரிதாப நிலையைக்கண்ட மானேஜர் மனந்தாளாதவராய் முன்னைய சம்பளத்தோடு கொஞ்சம் கூட்டிக்கொடுத்து தன்னிடமே வைத்தியசாலையின் பொறுப்புகளின் ஓர் பகுதியைக்கவனித்து வருமாறு நியமித்தார். பிரதாபனும் இவ்வுபகாரச் சம்பளம் கிடைத்த அதிர்ஷ்டபலத்தை எண்ணிமகிழ்ந்து தன்னருமைத்தாயுடனும் ஆப்த நண்பன் ஆனந்தனுடனும் ஆனந்தமாக தற்போழ்து குடும்பம் நடத்திக்கொண்டு வைத்தியசாலையின் அலுவல்களையும் மிக்க கவனத்தோடு கவனித்து வருகிறானென்ற செய்தி கேட்டு மிகுதியும் சந்தோஷமடைகிறோம். ஓர் B. A. பட்டதாரி பல இடங்களில் சென்றும் ஆதரவு கிடைக்காது கடைசி முறையாக தன் வாழ்க்கையின் ஓர் பகுதி குதூகலத்தோடு கழிந்து செல்வதற்கிலக்காக இருந்த வைத்தியசாலை பல்லாண்டு தழைத்தோங்கவும், அவ்வைத்தியசாலையின் உதாரமதிகொண்ட உத்தமராகிய மானேஜரவர்கள் வாழ்வு நல்வாழ்வுறவும் திருவருளை வழுத்துவோமாக. சுபம். சுபம்.

# மாதர் பகுதி.

## விவாகரத்து.

(தோழர், A. B. ஆதித்தர்)

(277-ம் பக்கத்தொடர்ச்சி)

இந்நாட்டுக்கு மேல்நாட்டு விவாகரத்துமுறை கூடாதென்றும், இந்தியப்பத்திரிகைகளிலும் விவாகரத்து வழக்கின் கோர்ட்டு நடவடிக்கை விபரங்கள் வெளியாகலாகாதென்றும் மேலே விளம்பியுள்ளோம். இதனால் விவாகமான தம்பதிகளிற்சிலர் மிக்க துக்ககரமாக வாழ்க்கை நடாத்துவதை நாம் அறியவில்லை என்பதல்ல. ஓரளவு விவாகரத்தை நாம் அனுமதிக்க முடியும். அந்த உரிமை மனைவிக்கும் இருக்கவேண்டும். மிக்க அதீதமான காரணங்களை முன்னிட்டே விவாகங்களை ரத்துச்செய்ய உரிமை இருக்கவேண்டும். அதாவது கணவன் இருந்தும் இறந்த நிலையை அடைந்தால், அவனது தேகம் காணப்படாமல் மறைந்துபோனால், அவன் இல்லாத நிலைமையே வந்துவிட்டதானால் மனைவி விவாகரத்துச் செய்துகொள்ளலாம். கணவன் தெரியாத இடத்துக்கு ஓடி மறைந்து போய்விட்டாலும், நெடுங்கால சிறைவாசம விதிக்கப்பட்டாலும், ஏற்கனவே சிலநோய்களுடன் அவன் இருந்து வருவது அல்லது நபும்சகனாயிருப்பது விவாகமாகி ஒரு மாதத்திற்குள் தெரியவந்தாலும் அவள் விவாகரத்துச்செய்துகொள்ளலாம். அதைக் காரணமாகக்கொண்டு மறு மணமும் செய்துகொள்ளலாம். இந்த உரிமையே கணவனுக்கும் இருக்கவேண்டும். சதிபதிகளுக்குள் இடைக்காலத்தில் ஏற்படக்கூடிய கொடுமைகள், நோய்கள், குடி, நிர்ப்பந்தங்கள், அவமானங்கள், அலட்சியம், அபிப்ராயபேதங்கள் ஆகியவைகளைக் காரணமாகக் கொண்டுங்கூட விவாகரத்து செய்துகொள்ளலாம். ஆனால் இப்படி விவாகரத்து செய்துகொண்டவர்களுக்கு சட்டத்தின் மூலம் மறு மணம் மறுக்கப்படவேண்டும். மறு மணத்துக்கு இடங்கொடுத்தால் அதை மனதில் வைத்து ஏதேனும் ஒரு சாக்கு வைத்து



சச்சரவு செய்து விவாகரத்துக்கு வழி கோலிவிடுவர். விவாகச்சட்டமானது ஒருவனும், ஒருத்தியுமாகவே வாழவேண்டும் என்று ஏற்படுத்தப்படவேண்டும். அச்சட்டத்தில் தாரம் இருக்க மறுதாரம் முடிக்க இடமிருக்கக்கூடாது. சட்டமும் இவ்வளவு கண்டிப்பாக இருந்தால்தான் பெண்ணானவள் காலம் பூராவும் ஒரு கணவனுடன் வாழவேண்டுமென்று விதியிருக்கிறபடியால் நல்ல ஒரு கணவனைத்தேடி மணஞ்செய்துகொள்ள வேண்டுமென்றெண்ணி நடந்துகொள்ளக் கூடும். அதுபோலவே வாழ்நாள் பூராவும் கஷ்டப்படாமல் சந்தோஷமாக இருக்கவேண்டுமே என்றெண்ணிப் புருஷனானவன் தகுந்த ஒரு பெண்ணைத்தேடி விவாகம புரிய யத்தனிப்பான். மறுமணத்துக்கு இடமிருந்தால் கைவிடப்பட்ட முந்திய மனைவியானவள் கஷ்டத்தோடு தெருவிலலைந்து மனங்கொதித்துத் தவித்து நின்று அவதிப்படவும், பிந்திய மனைவியானவள் தனக்கும் அக்கதி வருமோவென்று அவநம்பிக்கையுடன் சஞ்சலத்தோடு வாடி நின்று வாழ்க்கை நடத்தவும், குடும்பத்தில் விசுவாசம் குறைந்து சண்டை சச்சரவுகள் நிலவவும் இடமேற்படும். அன்றியும் தாலியை அழித்துப் பீலியும், பீலியை அழித்துத் தாலியும் செய்வது போல் நினைத்த நேரமெல்லாம் விவாகமும், விவாகரத்தும், மறு விவாகமும் செய்வது விவாகக் கட்டுப்பாடேயில்லாமல் விபசாரம் செய்வதையே ஒக்கும். இதனால் ஜனசமூகத்திடத்தில் நிலவரமுள்ள திருப்திகரமான இன்பம் ஜனிக்காமல் வியாகூலங்கள் அதிகரித்துத் துன்மார்க்க வியாதிகள் பரவக்கூடும். ஆகவே விவாகம் செய்துகொண்ட சதிபதிகள் இருவருமாவது, இருவரில் ஒருவராவது இஷ்டப்பட்டால் அவர்கள் செய்துகொண்ட விவாகத்தை ரத்துச் செய்துகொண்டு பிரிந்து நிற்கவும், அவ்வாறு செய்துகொண்ட விவாகரத்தை ரத்துச் செய்துகொண்டு ஒன்று சேரவும் மாத்திரம் சட்டத்தில் உரிமை இருக்கவேண்டும். அதாவது விவாகரத்துச்செய்துகொண்ட அதே இருவரும்தான் ஒன்றுசேரலாமே ஒழிய அடுத்தவருடன் மறு மணம் செய்துகொள்ள முடியாது. விவாகம் நடக்கும் பொழுதே இந்நிபந்தனைகள் சதிபதிகளுக்குத் தெரிவிக்கப்பட்டு அவர்கள் அதன்படி நடந்துவரவேண்டும்.

மற்றப்படி சாதாரண வாழ்க்கையின் மத்தியில் ஏதாவதொரு காரணங்கொண்டு விவாக ரத்து செய்துகொள்வது எவ்வகைத்தும் உசிதமாகாது. விவாக ரத்து செய்துகொள்வதானால் அற்ப காரியங்களுக்கும் வீண் மனஸ்தாப வேளைகளில் விவாகத்தை ரத்துச் செய்துவிடுவர். வாழ்க்கையானது இன்பமும் துன்பமும் நிறைந்தது. அதைப்பொறுமையோடு அனுபவியாதவர்கள் ஏன் விவாகம் செய்துகொள்ளவேண்டும்? மேல்நாட்டு விவாக ரத்துச்சட்டம் ஏற்பட்டுவிடுமானால் இங்கும் மக்கள் அடிக்கடி பிரிவதும், மறுமணம் செய்வதும், சஞ்சலத்தோடு வாழ்க்கை நடத்துவதும் நேர்ந்துவிடும்.

விவாகமான ஒருவன் வியாதியஸ்தனாகிவிட்டதாக வைத்துக்கொள்வோம். அவனது உடன்பிறந்தார்களோ பெற்றோர்களோ இல்லை; அல்லது அவர்களது ஆதரவு இல்லையென்று வைத்துக்கொள்வோம். அந்நிலைமையில் அவனது மனைவி விவாகரத்துச் செய்துகொள்வாளாகில் அவனது நிலைமை யாதாகும்? இன்பத்தில் மகிழ்ந்த மனைவி துன்பத்தில் கைவிடுவாளாகில் அவளை நம்பி அவன் செய்துகொண்ட மணத்தில் நன்மைதான் என்ன?

அதுபோலவே அவளது கஷ்டகாலத்தில் அவன் அவளைக் கைவிடுவானாகில் அவள் கதி என்னாகும்? அது நியாயமாகுமா? கஷ்டகாலத்திலும் காப்பாற்றுவதற்காகத்தானே துணை தேடுவது! அப்படிக்கின்றி இன்பத்துக்காக மாத்திரம் துணை தேடுவதும், துன்பகாலத்தில் பிரிந்துவிடுவதுமாகில் ஒருவரை ஒருவர் மனிதவர்க்கமாகக் கருதாமல் இன்பப்பொருளாகவன்றோ கருதவேண்டியதிருக்கும். மனிதன் தனது சந்தோஷத்தை மட்டும் அனுபவிப்பவனாயின் அவனை என்னவென்று சொல்வது? அவன் பிறருக்காகவும் பாடுபடவேண்டாமா? தம்பதிகள் ஒருவருக்கொருவர் சண்டை ஏற்பட்ட காலத்தும் பிணக்கு தீர்த்து இன்பமுறவேண்டாமா? ஒரு அற்ப மனஸ்தாபத்திற்குள் விவாக ரத்துச் செய்துகொண்டு அல்லோலகல்லோலப்படவேண்டுமா? விவாகரத்துச் சட்டம் வந்துவிடுவதால் என்ன நன்மை வந்துவிடப் போகிறது?



சகோதர சகோதரிகளுக்குள் அல்லது பெற்றோர் பிள்ளைகளுக்குள் அபிப்ராயபேதமேற்பட்டால் அவர்கள் தங்கள் சகோதர புத்திர உறவுகளை ரத்துச் செய்துகொள்வதில்லை — ரத்துச் செய்துகொள்ள முடியாது. அதுபோலவே கணவன் மனைவியை ரத்துச் செய்துவிட்டாலும் அவள் அவனது மனைவி என்னும் ரத்தக்கலப்பிலிருந்து நீங்கிவிடுவதற்கில்லை. என்றைக்கு அவர்கள் ஒருவர் உடலில் மற்றவர் வாழ ஆரம்பித்தார்களோ அன்றுமுதல் அவன் அவள் கணவன்தான். அவள் அவன் மனைவிதான்.

இந்த நிலைமையில் குடும்பத்தில் சந்தோஷம் நிலவவேண்டிய முறையை நாம் கையாளவேண்டும். கணவனுக்கும் மனைவிக்கும் அபிப்ராயபேதமேற்பட்டால் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து பணிவுடனும், பொறுமையுடனும், அன்புடனும் நடந்துகொள்ளவேண்டும். கோபம், பிடிவாதம், கடுஞ்சொல், வெறுப்பு, அடிபிடி சண்டைகளை ஏற்படுத்திக்கொண்டு குடும்பத்தில் பிளவை உண்டுபண்ணி வியாகூலப்படுவதில் பிரயோஜனமில்லை.

அறிவைப்பிரயோகித்து சாந்தமும், பொறுமையுங்கொண்டு வாழ்க்கை நடத்துவதற்கு கணவனோ மனைவியோ ஒத்து வரவில்லையானால்— அதன்மூலம் சகிக்கமுடியவில்லையானால் கூறாமல் சந்நியாசம் கொண்டமாதிரி ஒதுங்கியிருப்பதே உசிதமாகும். இவைகளெல்லாம் சமய சந்தர்ப்பங்களுக்கேற்ப அவ்வப்போது நடந்துகொள்ளவேண்டிய விதங்களாகும். இதற்குள்ளாக அவசரப்பட்டுக்கொண்டு மேலும் சங்கடத்தில் விழும்படியாக விவாக ரத்தோ மறுமணமோ செய்துகொள்வதற்குக் கிளர்ச்சிகளும் சட்டங்களும் தேவை இல்லை. அத்யாவசியமானால் விவாகரத்து செய்துகொள்ளட்டும். அப்படிச்செய்து பிரிந்திருப்பதே அவர்களுக்குத் தக்க தண்டனையாகும். பின்னால் நல்ல குணம் வந்தால் ஒன்றுசேரட்டும். அதற்குள்ளாக மறுமணம் செய்ய சட்டத்தில் இடமிருக்கக்கூடாதென்று கண்டிப்பாகத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த எமது அபிப்ராயத்துக்கு மாறாக அட்வகேட் ஸ்ரீமதி M. A. ஜானகி அம்மாள் அவர்கள் "கல்யாணத்தின் மூலமாக ஒன்றுசேர்க்கப்பட்ட தம்பதிகள் சுக வாழ்க்கை வாழ முடியாதெனக்கண்டால், அவர்களுடைய விவாகத்தை ரத்துச்செய்வதே நியாயமாகும். ஏனெனில் துக்ககரமான பந்தத்தால் பல தீய பலன்கள் ஏற்படக்கூடும். அத்தகைய வாழ்வு நடத்தும் தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தைகள்கூட கெட்ட சுபாவமுடையனவாகப் போய் விடும்" என்று அறிவிக்கிறார். அவருக்குப்பதில் கூறும் முகத்தான் மிஸஸ் பாகின்டோஷ் M. A. அவர்களின் அபிப்பிராயத்தைத் தெரிவித்து இக்கட்டுரையை முடிக்கின்றோம்.

மணம், கிரககிருத்தியம் இவ்விரண்டுமே எக்காலத்தும் மக்களது வாழ்க்கையின் முக்கிய அம்சங்களாகும். விவாகரத்து என்ற கோடரி இவ்விரண்டு அம்சங்களையும் வெட்டி வீழ்த்திவிடும்போல் தோற்றுகிறது. இக்கோடரியைக் கண்டு ஆடவரும் பெண்டிரும் ஒருங்கே அஞ்சவேண்டியதாயிருக்கிறது. விவாகரத்து ஏற்பாடு சமூகத்தை நிலைகுலைத்துவிடுமென்பதற்கு எத்தனை காரணங்கள் வேண்டுமானாலும் காட்டலாம். குடும்பத்தையே விவாகரத்து சீர்குலைத்துவிடுமென்பது சொல்லித் தெரியவேண்டிய விஷயமல்ல. கல்யாணத்தின் லட்சியம்—பிரஜோத்பத்தி—பூர்த்தியாவது குடும்பத்தில்தான். இதற்கு 'மரணம் பிரிக்கும் வரை' கணவனும் மனைவியும் ஒன்றுபட்டிருத்தலவசியம். விவாகரத்து செய்துகொண்டவர்களின் குழந்தைகளைவிடப் பரிதாபகரமான ஜீவன்களில்லை!

குடும்பம் என்ற ஏற்பாட்டை ஒழிக்க இக்காலத்தில் முயற்சிகள் நடைபெறுகின்றன. குடும்ப ஏற்பாடு காலத்திற்கேற்றதல்லவென்று பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் போன்ற நூலாசிரியர்கள் பலர் கூறித்திரிகின்றனர். 'இச்சா தாம்பத்தியம்' என்ற கொள்கையும் இப்பொழுது நிலவிவருகிறது. விவாக பந்தத்தைத் தளர்த்தி காமத்தைப் பூர்த்திசெய்ய அதிகப்படியான உரிமைகளை இருபாலரும் பெறவேண்டுமாம். இவ்வாறு செய்யினும் பிரஜோத்பத்தி ஏற்படும். ஆனால் இச்சா



தாம்பத்தியத்தில் பிறந்த குழந்தைகள் இப்பொழுதிருக்கும் சமூகத்தினரைப்போல் வளரமாட்டா. பெற்றோர்களின் கடமை இல்லாதுபோமாயின் குழந்தைகள் பூச்சி புழுக்கள் போலத்தான் வளரும். நிலைபெற்ற நோக்கமும் லக்ஷியமுமின்றி அவை தான்தோன்றித்தனமாய் வளரும். அமெரிக்காவிலும், ரஷ்யாவிலும் இம்முறை பரீக்ஷிக்கப்படுகிறது. ஆனால் இது சரியாக நடைபெறவில்லை. தறுதலைகளாய்த் திரியவிரும்பும் ஒரு சிலரே இப்புதிய 'சீர்திருத்தங்களை' ஆதரிக்கின்றனர்.

இவ்வேற்பாடுகள் சமூகத்தின் யோக்கியதையைக் கெடுத்துவிடும். மேலும் மேலும் யோக்கியதையை அபிவிருத்தி செய்துகொள்ளவே மக்கள் முயலவேண்டும். குடும்பமே இந்த லக்ஷியத்திற்கு மார்க்கம். இயேசு நாதர் விவாகரத்தையும், இச்சா தாம்பத்தியத்தையும் கண்டித்திருக்கிறார். சில தாம்பத்தியங்கள் சரியாக நடப்பதில்லை என்பதை நான் அறிவேன். அத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்கள் பிரிந்து வாழட்டும். ஆனால் கணவனோ மனைவியோ உயிருடனிருக்கும்பொழுது மறுமணம் செய்துகொள்வது விரும்பத்தக்கதில்லை. மேலும் பாவ கிருத்தியங்களே பெரும்பாலும் தம்பதிகளுக்குள் சச்சரவை உண்டுபண்ணக் காரணமாய் இருக்கின்றன. கொஞ்சக்காலம் பிரிந்து வாழ்ந்தாலும் மறுபடியும் சேருவோம் என்ற எண்ணம் தம்பதிகளுக்கிருந்தால் அபிப்ராயபேதம் தீர்ந்துவிடும். காதலென்பது நாளுக்கு நாள் அதிகப்படும் உணர்ச்சி. கணவனும் மனைவியும் பரஸ்பரம் உதவி புரிவதோடு கஷ்டங்களையும் சகித்துவந்தால் காதல் வளருவது நிச்சயம். கடவுளால் தம்பதிகள் சேர்க்கப்படுகின்றனர், மனிதன் அவைகளைப் பிரித்துவைக்காமல் இருப்பானாக.

# விதவைகள் மறுமணக் கும்மி!

(டோம்போ, திரு வே. க. வெள்ளையன்.)

வையகம் போற்றும் பெரியோர்களே நாங்கள்
வந்து நிற்பதைப் பாருங்களே
ஐயோ இந்நாட்டின் அநியாயச் சட்டத்தை
யாரிடஞ் சொல்லி முறையிடுவோம்

ஆதி சிவனது சோதனை போலிந்த
அநியாயச் சட்டத்தின் வாதனையால்
பாரினில் பெண்களாய்ப் பிறந்து நாங்களும்
படுந்துயரத்தைக் கண் பாருங்களே

கற்புடை மாதர்கள் நோக்க மறியாமல்
காசுமே லாசையா லெங்கள்பிதா
பற்கள் கழண்டதோர் பாழுங் கிழவர்க்கு
பாரறிய மாலை சூட்டிவைத்தார்

சீருஞ் சிறப்புடன் சென்றொரு மாதத்தில்
செல்ல மணந்துணிந்தெங் கணவர்
சென்றுவிட்டா ரெம லோகமதை நாடி
சீர்கெட்டு நிற்கின்றோம் பாரினிலே

மாலை கழட்டவும் மஞ்ச ளிழக்கவும்
மண்டலத்தி லுள்ளோ ரேசிடவும்
வேலை யிருந்து வெளியினில் சென்றாலும்
வேகவே நொய்கின்றார் பாருங்களே

வில்லோன் விடுகின்ற பாணமதை வெல்ல
வேறு வகைகளறியாமல்
கல்லுங் கரையுது கால்வாயா யோடுது
கண்களில் நீரு பெரியோர்களே

மாதா பிதாவிடம் வாதனையால் நொந்து
வார்த்தை யுரைத்திடும் போதவர்கள்
பாதக மேற்படும் நம்மள் குலத்திற்கு
பைங்கிளியே என்ன செய்வோமென்பார்



கன்னிப் பருவத்தின் காதலியா நாங்கள்
கற்பிக்கானது சோதனை யால்
கண்ணிப் புலம்பிட காலமிது வென்று
கர்த்த னமைத்திட்ட கட்டளையா?

மண்டலம் போற்றும் பெரியோர்களே இந்த
மங்கையர்க்காக மனதிரங்கி
காவேரியுள்ள அளவு எக் காலமுங்
கன்னி மறுமணம் நாட்டிவைப்பீர்

கன்னி மறுமணம் நாட்டிவைக்க வென்று
கருத்தில் நினைத்திடும் பேர்களுக்கு
புண்ணிய மாங்கோடி புண்ணிய முண்டென்று
போற்றிக் கும்மி யடியுங்கடி.

(சுதந்தரன்)

---

## சந்தாநேயர்களே!

உங்களில் பலர் எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி சித்தன் பத்திரிகையை அன்புடன் ஏற்று அதன் சந்தா அணா எட்டை மனமுவந்து அனுப்பியிருக்கிறீர்கள். அதற்காக நன்றிபாராட்டுகிறோம்.

சித்தனின் முதல் ஆண்டு முடிவடைய இன்னும் மூன்று இதழ்களே பாக்கி இருக்கின்றன. சந்தாவும் குறைந்த விகிதந்தானே! அடுத்த சஞ்சிகை அனுப்புவதற்குள் பாக்கியிருக்கும் கனவான்கள் மணியார்டர் மூலமாகவோ தபால் ஸ்டாம்பாகவோ சித்தன் வருட சந்தா அணா எட்டை அனுப்பி சித்தனை ஆதரிப்பீர்களென்று நம்புகிறோம்.

மானேஜர்,
சித்தன்.

# அகத்தியர்
# குணவாகடம் 3000.

சாமி, விருதை, சிவஞான யோகிகள்.)

(282-ம் பக்கத்தொடர்ச்சி)

போட்டபின்பு அதைஎடுத்துச் சுருட்டித் தந்தால்
    பொங்குமுட னிளைப்புத்தான் தணியும் பாரே
ஆட்டிவிடுமா தோடைக் கியாழ மேனும்
    அன்பாக வசம்பினிட கியாழ மேனும்
காட்டிவிடு காப்பிஸிரைத் தண்ணீ ரேனும்
    கனமான கற்பூரம் காய மேனும்
பூட்டிவிட்டால் ரோகமது தணிந்து போகும்
    புவியதனில் சஞ்சாரம் செய்வான் பாரே. (67)

## தமரக வாயு.

சஞ்சரிக்கும் தமரகத்தின் வாயு கேளாய்
    சாதகமாய் இருதயத்தைப் பற்றிக் காணும்
நெஞ்சடைக்கும் இக்கொடிய ரோக மப்பா
    நிலைத்துவருந் தன்மைதனை சொல்வேன் பாராய்
பஞ்சான இரத்தமுறை ஸ்தானந் தன்னில்
    பரிவாக நின்று வேதனைகள் செய்து
நஞ்சான மார்முதுகு கழுத்துத் தன்னில்
    நடப்பதுபோ லிருக்கும் தீ நாட்டந் தானே. (68)

## இரத்த காசம்.

நாட்டமடா இரத்தகாச ரோக நேர்மை
    நரருக்குத் தோன்றுகின்ற தன்மை கேளாய்
பூட்டகமாய்க் குரவளையின் குரலில் நின்றும்
    புனித சுவாசக் குழற்குள்ளே நின்று



தாட்டிகமாய்ப் புப்பிசத்திற் குள்ளே நின்றும்
    தான்வாயில் ரத்தமது வந்த தானால்
சாட்டிகமாய்ச் சிலவேளை வெளித் தோன்றாமல்
    சடலத்திற் புப்பிசத்தில் நிற்கும் தானே. (69)

தானாக அவ்வேளை இடது பக்கம்
    தானிருக்கும் புப்புசத்தி லிரத்தம் ஓடி
ஊனான சூதகந்தா னதிக மானால்
    உறுதியா யிந்தநோ வுண்டா மய்யா
தேனான இருமலது உண்டாம் போது
    தெளிவான பருவத்தி லேற லாலும்
கோனான இந்தநோ யுண்டா மென்று
    குறிப்பாகச் சொல்லுகிறேன் குறியைக் கேளு. (70)

கேளடா குறியதனைச் சொல்லக் கேளாய்
    கெடியான மார்புதனை வேதனையே செய்யும்
நாளடா வாயடைப் பாயாசங் காணும்
    நலமான முகம் சிவப்பு வாயிலுப்பு
வாளடா வறட்சியுட னிருமல் காணும்
    வளமான இருதயந்தான் துடிப்புத் தோன்றும்
நீளடா மாரினுட எலும்பின் கீழே
    நிச்சயமாய் உட்டணங் களுண்டாம் பாரே. (71)

பாரய்யா இக்குறிகள் ஒன்று மின்றி
    பரிவுடனே இரத்தந்தான் கபத்தில் கீத்தாய்
கூறய்யா துளித்துளியாய்க் கட்டியாகக்
    குறிப்புடனே விழுக்குமடா யாந்தர்க்கே தான்
வாரய்யா ஆழாக்குப்படி கணக்கு
    பவளமாய் இரத்தந்தான் விழுகு மப்பா
தேரய்யா இருமலுடன் தும்மும் போது
    தெளிவுடனே இரத்தந்தான் வருகுங்காணே. (72)

(தொடரும்)

# மருந்து செய் பகுதி.

## மேகநாதக் குளிகை.

சாதிலிங்கம், பொரித்த வெங்காரம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல், பொரித்த பெருங்காயம், ஓமம், காட்டாமணக்கு வித்து, வசம்பு, இந்துப்பு, வாய்விளங்கம், கடுகுரோகணி, அதிமதுரம், கோஷ்டம் வகைக்கு ரூபாயெடை ஒன்று. இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து, குளிர்ந்த ஜலம் விட்டு ஒரு நாள் அரைவைசெய்து கடலைப் பிரமாணம் குளிகை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

**அளவு:—** வேளைக்கு ஒன்று அல்லது இரண்டு குளிகை வீதம் காலைமாலையாக நாளொன்றுக்கு இரண்டு வேளை வீதம் உட்கொள்ளவும்.

**அனுபானம்:—** வாய்வுக்கு சீரக கஷாயம். மூல கிராணிக்கு நெல்லிக்காய்ச் சாறு. சுரத்திற்கு வேம்பின் பட்டைக் கஷாயம். தலைச் சுற்றுக்கு மாதளம் பழச்சாறு. சன்னிக்கு மாவிலிங்கம்பட்டை, முருங்கைப்பட்டைச்சாறு. மூலத்திற்கு எருமைத்தயிரில் தொட்டால் வடி இலையை அரைத்துக் கலக்கி அதில் குளிகையைக் கொடுக்கவும். பிரமேகத்திற்கு வெள்ளாட்டுப்பால். வயிற்றெரிச்சலுக்கு நொச்சிச்சாறு. மாந்த சுரத்திற்கு சுக்குக் கஷாயம். வயிற்றுக் கடுப்பிற்கு வாழைப் பூச்சாறு. வீக்கத்திற்கு வெள்ளாட்டு நீரில் சாரணை வேரை அரைத்துக் கலக்கி அதில் உரைத்துக் கொடுக்கவும். மூல கிராணி, வாயு, தலை சுற்றல், மயக்கம், வீக்கம் முதலியன குணமாகும்.

**பத்தியம்:—** புளி, கடுகு நீக்கவும்.



## சுகபேதி சூரணம்.

சுக்கு, மிளகு, திப்பிலி, வால்மிளகு, வாய்விளங்கம், அதிமதுரம், இந்துப்பு வகைக்கு ரூபாயெடை ஒன்றும், சூரத்தாவரை, சிவதை, கடுக்காய் வகைக்கு ரூபாயெடை மூன்று இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொள்ளவும்.

**அளவு:-** காலையில் ஒரு ரூபாயெடை சூரணமும் கொஞ்சம் சீனியும் கலந்து வாயிற்போட்டு கொஞ்சம் வெந்நீர் சாப்பிடவும்.

**உபயோகம்:-** ஆசனக்கடுப்பின்றி சுகமாய்ப் பேதியாகும்.

**N.B:-** மலக்கட்டு உள்ளவர்கள் இரவில் படுக்கப்போகும்போது $\frac{1}{4}$-ரூபாயெடை சூரணமும் சமனெடை சீனியும்கலந்து சாப்பிட்டுக் கொஞ்சம் வெந்நீர் அல்லது பால் சாப்பிடலாம்.

---

## மேகரோகத் தைலம்.

நெல்லிக்காய், பொன்னாங்காணி, பொற்றலைக்கரிப்பான், எலுமிச்சம்பழம், இஞ்சி இவைகளின் சாறு வகைக்கு படி ஒன்று, வெள்ளாட்டுப்பால் படி ஒன்று, நல்லெண்ணெய் படி ஒன்று இவைகளை ஒன்றாகச்சேர்த்து நான்கு நாட்கள் சிறுகளரித்து மெழுகுபதமாகவடித்து அதில் ஏலம், கிராம்பு கோரைக்கிழங்கு, கோஷ்டம், கருஞ்சீரகம், கத்திரிமஞ்சள் வகைக்கு ரூபாயெடை $\frac{3}{4}$. இவைகளை வஸ்திரகாயஞ்செய்து, ஷை எண்ணெயில்போட்டு 3-நாட்கள் வெய்யலில்வைத்து முழுகிவரவும்.

**உபயோகம்:-** மேகம், கொதிப்பு, வெட்டை, கண் புகைச்சல், வறட்சி குணமாகும்.

# மூலிகைப் பகுதி.

## குறிஞ்சா.

கரப்பான்கிரந்தி கடியவிரும்புண்காச
முரப்பாம்விஷபாக மோட்டு-நிரைப்பான
அக்கரத்தைமாற்றிவிடு மாயிழையேபித்தமுமாந்
தக்ககுறிஞ்சாவினிலை தான்.

(பதார்த்தகுணசிந்தாமணி)

சிறு குறிஞ்சா, பெரு குறிஞ்சா என இருவகைப்படும். இது இந்தியாவின் தென் தேசத்தாரால் குறிஞ்சாவென்றும், வட தேசத்தாரால் அந்த முள் என்னும் பெயர் வழங்குகிற இந்த மூலிகையின் வேரும் இலையும் வாந்திசெய்யும். குணத்தையுடையதாயிருக்கின்றது. உலர்ந்த இலையை இடித்துச் சூரணஞ்செய்து அரைக்கால் ரூபாயெடை கொடுத்தால் வாந்தியுண்டாகும். வெந்நீர் மிகுதியாய்க் குடித்தால் நன்றாய் வாந்தியாகிறதற்கு உதவியாயிருக்கும். இரத்தக்கடுப்பு, வயிற்றுப்போக்கு இவைகள் சுரத்துடனே ஆரம்பித்திருக்கினும் ஷெடி மருந்தில் 2-அல்லது $2\frac{1}{2}$-குண்டுமணி யெடை எடுத்து அதனுடன் $\frac{1}{8}$-ரூபாயெடை விளாம்பிசின் சேர்த்து ஜலத்திற் கலக்கிக்கொடுக்கலாம். நாள் ஒன்றுக்கு 2-வேளை கொடுக்கவும். ஜலதோஷத்திற்கும், நெடுநாளாயிருக்கப்பட்ட இருமலுக்கும் குறிஞ்சாவை விளாம்பிசினுடன் மிளகு கஷாயத்தில் கொடுக்கில் குணமாகும். அன்றியும் சுக்கிருமல் ஆரம்பித்தவுடன் கொஞ்சங்கொஞ்சமாகவும் கொடுக்கலாம்.

கொடிக் குறிஞ்சாஇலை:- இருமல், கரப்பான், கிரந்தி, நாவைப்பற்றிய நோய், விஷப்பாகம் முதலியவைகளைப் போக்கும், பித்தம் உண்டாம். சிறு குறிஞ்சா வேர் பாம்பு விஷத்தையும் தீர்க்குமென்று சொல்லப்படுகிறது. அது கஷாயமாக உள்ளுக்குக் கொடுக்கப்படுகிறது. இதன் சூரணம் கடித்தவாயில் பூசப்படவேண்டும். இதன் வேர் இங்கிலீஷ்காரர் இபிகாக்கனுவுக்குச் சரியான குணத்தை யுடையதாகக் கூறுகின்றனர்.



# நாடகப் பகுதி.

## நாகானந்தன்.

(லேட் H. ராமசாமி அய்யர் அவர்களால் எழுதப்பட்டது)

(289-ம் பக்கத்தொடர்ச்சி)

அங்கம் 2] [களம் 4

**மோகனமாலை;**— சகீ! நீ சொன்னது வாஸ்தவந்தான். நாகானந்தர் நீடித்தகாலமாய் சேனாதிபதியாய் இருந்தவர். பலயுத்தங்கள் நடத்தியவர். அதுபற்றி மிகுந்த அனுபவமுள்ளவர். போடீ! போ! பைத்தியக்காரி? நேற்றுவரை அவர் தபோவனம் வாழ்ந்தவரன்றோ! அவர் சுந்திரானந்தர்பால் போர்த்தொழில் கற்றனரேயன்றி எங்கேனும் போர் தந்தனரோ? அதனால் அனுபவம் உற்றனரோ? அப்படி இருக்க எதிராளியின் பலாபலம் அறிந்ததெப்படி? அன்றோடு சென்று போர் செய்யத்துணிந்ததெப்படி? நகரங்கள் பலவும் கைக்கொண்டதெப்படி? கோட்டை புகுந்த சுந்திரகுமாரரைக்காக்க முன் வந்ததெப்படி? இராஜகேசரியை எதிர்த்து வெற்றிபெற்று சுந்திரகுமாரரை சிறை மீட்டதெப்படி? யுத்ததந்திரம் முற்றும் கற்று தமதாக்கியதனாலேயே செய்வனவெல்லாம் ஒளியன்ன செவ்வனே மனத்துள் வெளியாயது. எல்லாம் முடித்து வாகைசூடினர். சுந்திரகுமாரர் தம் எழுதாக்குறைக்கு அழுதாற்பயனுண்டோ? நல்வேளை அவர் சொல்லப்படாதது.

**வாகுணன்:**—குழந்தைகாள்! இதுவிஷயம்பற்றி வீண் விவகாரமேன்? நாகானந்தன் சோனாடு வென்றனன். சுகுணனுக்கு நற்கீர்த்தி தந்தனன்.

**சுகுணசுந்தரி:**— தாத்தா! அவர் என்ன உற்றார் பெற்றார் தெரியாவனாதையாமே?

**வாகுணன்:**—குழந்தாய் இரத்தினம் தீட்டப்படும்வரை கல்லினையொக்கும். அதுபோல அவன் உண்மை வெளியாகும்வரை அவன் அனாதையே.

**சுகுணசுந்தரி:**— தாத்தா! அப்படியாயின் அவர் குலநலம் வெளியாமோ? எல்லவாரும் ஒற்றுப்பெருவரோ?

வரகுணன்:— சிம்மமன்றி கரியும் யானைக்குழாத்தை சின்னபின்னமாக்குமோ? அவ்வாறே உத்தம க்ஷத்திரியர்க்கன்றி போர்வலியும், யுத்த தந்திரமும் தெள்ளென விளங்குமோ? ஆதலின் அவன் க்ஷத்திரியனேயாம். எல்லாம் சமீபமே வெளியாம். சென்று வருகவா?

சுகுணசுந்தரி:— தாத்தா! போய் வருக. (மறைதல்) தோழிகாள்! மிகுதியுள்ள பொழுதை சுகமே கழிக்க சோணாட்டு வெற்றியைப் புகழ்ந்து பாடுவோம்.

மூவரும் பாடுதல். பின் மறைதல் (தொடரும்)

# ஓர் வேண்டுகோள்.

அன்பார்ந்த ஐயா!

"சம்பிரம வளம் பெருகு தென்முகவையம்பதி தழைக்கவரு சந்த்ரோதயம்;" "விற்பன கலைஞான பீடம்;" "வித்வ சாமர்த்ய இரத்ன தீபம்;" "மதுரப்பிரவாகம்;" "கற்பனை அலங்கார பிம்பம்;" "சபாபூஜித திவ்யப்பிரசங்க துல்யம்" என்பனவாதிய பெயர்கள் சிறந்தும், இராமநாதபுர சேது சம்ஸ்தானம் ஸ்ரீமான் பொன்னுச்சாமித் தேவரவர்களால் தந்தப்பல்லக்கும், இரத்தினகண்டிகையும், கவிச்சிங்க விருதுப்பெயரும் பெற்றுவிளங்கிய விஸ்வகுலதிலகர் பழநி மாம்பழக்கவிச்சிங்க நாவலரவர்களது ஜீவிய சரிதையைத் தமிழில் ஆங்கில முறையைத்தழுவி விரிவாகவும், ஆராய்ச்சியுடனும் எழுதி வெளியிடவிரும்பி நாவலரது சரிதசம்பந்தமான குறிப்புக்களையும், தனிப்பாடல்களையும், சீட்டுக்கவிகளையும், மற்றும் பல சிறு பிரபந்தங்களையும் சேகரித்துக் கொண்டிருக்கிறேன். பொதுநலமும், தமிழபிமானமிக்க அன்பர்கள், எனது வேண்டுகோளைக் கவனித்து தங்கள் வசமுள்ள குறிப்புக்கள், சீட்டுக்கவிகள்முதலியவற்றை அடியில்காணும் விலாசத்திற்கு அனுப்பும்படி கோருகிறேன். அனுப்பப்படுமவைகளை நன்றியறிதலுடன் ஏற்று உதவிய அபிமானிகளின் பெயர்களை நூலுள் பதிப்பிக்கப்படும்.

சி. கு. நாராயணசாமி முதலியார்,
கலைமகள் தமிழகம்,] தமிழ்ப்புலவர் தொகுப்பாசிரியன்,
டோ-ர். 139, தாமஸ் வீதி, கோயமுத்தூர்.



# கமிஷனர் பிரிவு.

இவ்வூர் முனிசிபல், கமிஷனர் ஸ்ரீமான் கோமதிநாயகம் பிள்ளை அவர்களிடம் நம்பிக்கையில்லையென்று 5-8-35ல் நடந்த மீட்டிங்கில் முனிசிபல் சபையார் தீர்மானித்ததற்கிணங்க மேற்படியார் அவர்களை போடிநாயக்கனூர், முனிசிபாலிடிக்குக்கமிஷனராக சர்க்கார் மாற்றியிருப்பதில் ஸ்ரீமான் பிள்ளை அவர்கள் இவ்விதம் மாற்றிப் போகும்படி கவுன்ஸிலர்களின் வெறுப்பைத்தேடிக்கொண்டதுபற்றி மிகவும்விசனிக்கிறோம். எனினும் கமிஷனர்கள் எந்த நோக்கத்துடன் சர்க்காரால் நியமிக்கப்படுகின்றனரோ அந்த நோக்கத்தைப் பூர்த்திசெய்து வரிசெலுத்துவோர்களின் அன்பையும், ஜனப்பிரதிநிதிகளின் ஒத்துழைப்பைக்கொண்டுபொதுஜனநன்மைகளையுங்கருதி நடந்துகொள்வார்களென எதிர்பார்க்கிறோம்.

# Mr. பாசுதேவ் அவர்கள்.

சென்னை சட்டசபை மெம்பரும், முனிசிபல் சிப்பந்திகள் பெடரேஷன் பொதுக்காரியதரிசியுமான Mr. பாசுதேவ் பி.ஏ.பி.எல்; எம்.எல்.ஸி; அவர்கள் சென்ற 3-9-35ல் இரவு இங்கு விஜயஞ்செய்தார்கள். அதுசமயம் இவ்வூர் நகரசபைச் சிப்பந்திகள் அவரை ரெயில்வே ஸ்டேஷனில் வரவேற்று நன்கு உபசரித்தனர். மறுநாட் மாலை 4-மணிக்கு புதிய ஹைஸ்கூல் கட்டிடத்தில் அவருக்கு ஓர் உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுத்தனர். அதற்குப்பதிலளிக்கையில் மிஸ்டர் பாசுதேவ் அவர்கள் இவ்வூர் இயற்கையமைப்பைக்கண்டு தாம் பெரிதும் மகிழ்ச்சியடைவதாகவும் இத்தகைய விசேஷமான ஸ்தலத்தில் வித்யாபிவிர்த்திக்குச் சர்க்கார் உதவி போதுமானதில்லையென்றும் இவ்வூர் தேவஸ்தானத்தார் கல்விக்குமிகவும் உதவிசெய்யவேண்டியதுமன்றி ஏழைவிடுதி குஷ்டரோகவிடுதிகளையும் ஸ்தாபிக்க வேண்டுமென்றும் தெரிவித்தார். மேலும் தாமும் வேண்டிய முயற்சிகள் செய்து ஆரம்பக்கல்வி, உயர்தரக்கல்வி முதலியவைகட்குச் சர்க்கார் கண்திறக்கும்படி செய்யப்போவதாகவும் உறுதிகூறினார். மாலை 6-மணிக்கு டவுன் பழைய ஹைஸ்கூல் கட்டிடத்தில் துக்கூட்டத்திலும் பேசினார்கள். (ஒரு நிருபர்)

# மதிப்புரைகள்.

## 'ஜகன்மோகினி.'

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் அவர்களை ஆசிரியையாகக் கொண்டு சென்னையினின்றும் பிரசுரிக்கப்படும் பிரதி ஒன்று வரப்பெற்றோம். பல நாவல்கள் தமிழில் இயற்றி வெளியிடப்பட்டிருக்கிறது. கதையின் சாராம்சம், பொருட்சுவை, நகைச்சுவை, மிகவும் பாராட்டத்தக்கது.

வருடசந்தா ரூ. 1—8—0.

மானேஜர், ஜகன்மோகினி ஆபீஸ்,
26, தோடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

## 'தமிழ்த் தொண்டன்'

யாழ்ப்பாணம், வித்வான், வ. மு. கனகசுந்தரம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு மதுரையினின்றும் வெளிவருகிறது. இதன் பிரதிகள் வரப்பெற்றோம். இதில் கதைகள், ஹாஸ்யம், சினிமாப்பகுதி, இராஜீயவிஷயங்கள் முதலியன காணப்படுகின்றன. அவைகள் படிப்பவரின் மனதைப்பரவசப்படுத்தும் தன்மையானவையாயிருக்கின்றன. இதனை பொது மக்கள் ஆதரிப்பார்களாக.

தனிப்பிரதி விலை அரை அணா.

மானேஜர், தமிழ்த்தொண்டன் ஆபீஸ், மதுரை.

## 'அறிவுக்கதிர்'

இதன் ஆசிரியர், K. S. வேதமுத்து அவர்கள். இம்மாத வெளியீடு ஈரோடினின்றும் வெளிவருகிறது. இதில் மாணவர்க்கேற்ற நன்மதிகள், அறிவுரைகள், சுகாதாரம், பெரியார் ஜீவிதசரிதங்கள் முதலியன எளியநடையில் எழுதப்பட்டிருக்கின்றன. மாணவர் அறிவு வளர்ச்சிக்கு பெரிதும் பயன்படத்தக்கது.

வருடசந்தா உள் நாடு அணா 10. வெளி நாடு ரூ. 1.
தனிப்பிரதி பை 6.

மானேஜர், அறிவுக்கதிர்.


# பூபதி செந்தூரம்.

இதை உட்கொண்டால் ஜுரம், ஜன்னி, வாந்திபேதி வயிற்றுப்போக்கு, மகமாரி (பிளேக்) பித்தம், கிறுகிறுப்பு, சூலை, குன்மம், சுவாசகாசம், கபம், வாதம், உடல் வலி, பொருமல், அண்ட வாய்வு, சூதக வாய்வு, பக்கவாதம் முதலிய நோய்கள் தீருவதோடு பிள்ளைபெற்ற பெண்களுக்குண்டாகும் எல்லா நோய்களும், குழந்தைகளுக்கு உண்டாகும் மாந்தங்கள், தோஷங்கள், ஜுரம், ஜன்னி, இருமல் முதலிய சகல நோய்களும் குணமாகும்.

தோலா 1-க்கு விலை ரூ. 4—0—0.
தோலா ¼-க்கு விலை ரூ. 1—0—0.
(தபால் சார்ஜ் வேறு)

**சாமி, விருதை, சிவஞான யோகிகள்**
சிவஞான சித்த பார்மஸி, கோவிற்பட்டி.

தமிழ் பிரமசூத்திர ஆசிரியர்,
சாமி, விருதை, சிவஞான யோகிகளால்
வெளியிடப்பட்ட புத்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | தேவோபாச னதீபம் (விக்கிரகாராதன விளக்கம்) | 0— 8—0 |
| 2. | விபூதி ருத்திராக்ஷதாரண நிருபணம் | 0—14—0 |
| 3. | வேதாகம உண்மை | 0— 1—0 |
| 4. | சிவஞானபோத வினாவிடை | 0— 8—0 |
| 5. | கோவிற்புரி புராணம் | 1— 0—0 |

கிடைக்குமிடம்:—

**சாமி, விருதை, சிவஞானயோகிகள்**
கோவிற்பட்டி.

ஏன்

# கஷ்டப்படுகிறீர்கள்?

ஏழு தலைமுறையாய்க் கையாண்டனுபவம்
வாய்ந்ததும், மகானின் அனுக்கிரகம்
பெற்றதும், சித்த வைத்திய
மகாநாடுகளிலும், கண்காக்ஷிகளிலும்
மதிப்புப் பெற்றதும், உள்ளூர்வாசிகளால்
புகழப்பெற்றதுமான

சி. எம். சாமி

## குரு தாம்பிர பஸ்பம்

சாப்பிடுங்கள்.

குஷ்டம், திமிர், மதமதப்பு, குறைநோய்
குழிப்புண், கண்டமாலை, பவுத்திரம்,
அண்டவாய்வு, யானைக்கால் முதலிய சகல
ரோகங்களையும் கண்டிக்கக் கூடியது.

இதுமாத்திரமல்லாமல்
மேற்சொன்ன வியாதிகள் திரும்பவும்
அணுகவொட்டாது.

100-வேளை பஸ்பம் அனுபானத்துடன்
விலை ரூ. 50—0—0.

ஏழைகளுக்கு மாத்திரம் பாதி விலை.

தபால் சார்ஜ் வேறு.

---

மலையப்பசாமி வைத்தியசாலை,
பழனி S. I.

---



வாலிபம் வேண்டுமா?

சி. எம். சாமி

## மன்மத குளிகை

சாப்பிடுங்கள்.

திடகாத்திரர்களாய், வீர புருஷர்களாய்,
நல்ல ஆரோக்யமும், ஆயுள் விருத்தியும்
அடைந்து, உலக வாழ்க்கையில் ஒப்பற்ற
இன்பத்தை அடைவீர்கள்.
ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம்.

நரம்புத்தளர்ச்சி, தாதுநஷ்டம், துரிதஸ்கலிதம், விந்துடைவு, கோசந்துவளல், சோர்வு, இடுப்பு வலி, பலஹீனம் முதலியவைகளைப் போக்கி, இரத்த விருத்தி, சரீர புஷ்டி, தாதுபலம், போகசக்தி வீரியவிருத்தி, இல்லற ஒற்றுமை முதலியவைகளைக் கொடுக்கும். தளர்ந்த நரம்புகளுக்கு வலுவைக்கொடுத்து, நாதத்தை நீடிக்கச்செய்து, மாதர் மனதைத் திருப்திபண்ணி, ஆச்சரியப்படும்படி செய்யும் அபூர்வ திறமை இதற்குண்டு. அனுபவித்தவர்கள் இதன் அற்புத சக்தியைப்பற்றி மிக வியந்து கூறுகின்றனர்.

20-குளிகை விலை ரூ. 2—0—0.
(தபால்சார்ஜ் வேறு.)

### நற்சாட்சி.

ஐயா, தங்கள் மன்மத குளிகையை யானும் எனது நண்பனும் சாப்பிட்டு நல்ல தேகாரோக்கியத்துடனும் மனச்சந்தோஷத்துடனும் இருக்கிறோம். உடம்பிலுள்ள சகல வியாதியும் அடியோடு தொலைந்துவிட்டன.

(Sd.) P. சின்னத்தம்பி, M. D. C.
26—5—34. குவான்டன் பாகாங். F.M.S.

189922

பால
குடோரி
குளிகை
புட்டி 1-க்கு
விலை
ரூ. 1-0-0.



பால
சஞ்சீவி
குளிகை
புட்டி 1-க்கு
விலை
ரூ. 1-0-0.

## உங்கள் குழந்தை ஏன் அழுகிறது.

அதன் சரீரத்திலுள்ள தொந்தரவுகளை பெற்றோர்களாகிய உங்களிடத்தில் கூறும் சக்தி அதற்கில்லையே! நீங்கள் எப்படி இந்தத் தொந்தரவை நீக்குவீர்கள்? யாராவது ஏதாவது சொல்லக்கேட்டால் அம்மாதிரியே செய்து குழந்தையின் சரீரத்தைப் பாழ்படுத்தி விடுகின்றீர்கள். இனிமேல் அவ்விதம் செய்யாதீர்கள். குழந்தைகள் வைத்திய நிபுணரான பழனி சி. எம். சாமி மருந்துகளே சிறந்ததெனப்பெயர் பெற்றிருக்கின்றன.

நீங்களும அனுபவத்தில் கண்டறிய ஒரு முறை ஆர்டர் செய்யுங்கள்.

பயனற்ற மருந்துகளைப் பாலர்களுக்கு வாங்கிக்கொடுத்து பாழ்படுத்தாதீர்கள்.

பெரிய பெரிய டாக்டர்கள் கைவிட்டபோதிலும் கவலை வேண்டாம்.

சகல வியாதிகளுக்கும் எம்மிடம் மருந்து உண்டு.

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
**பழனி S. I.**

# நிரை எழுதுவோர்

## கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

1. விஷயங்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில் சுத்தமாக மையினால் எழுதப்படவேண்டும். சித்தனில் மூன்று அல்லது நான்கு பக்கங்களுக்குள் அடங்கக்கூடிய விஷயங்கள் முதன்மையாகக் கவனிக்கப்படும்.

2. பிரதி ஆங்கில மாதம் பத்தாம் தேதி பத்திரிகை வெளிவரும். ஆசிரியரால் அங்கீகரிக்கப்படும் கட்டுரைகள் மட்டும் பிரசுரிக்கப்படும்.

3. சித்தனில் பிரசுரமாகும் எல்லா விஷயங்களின் காபிரைட் பிரசுரம் செய்வோர்க்கே உரிமையாகும்.

4. கட்டுரையாளர்களின் கருத்துகளுக்கும், அபிப்பிராயங்களுக்கும் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியாகார்.

5 நம்பி பிரசுரிக்கும் கட்டுரைகள் ஏற்கனவே உரிமையாக்கப்பட்டிருந்தால் அதற்குப் பத்திரிகாசிரியர் உத்தரவாதியன்று.

6. கட்டுரைகளை கூட்டவும், குறைக்கவும், ஏற்றுக்கொள்ள மறுக்கவும் பத்திரிகாசிரியருக்கு அதிகாரமுண்டு

7. அங்கீகரிக்கப்படாத கட்டுரைகளை திருப்பி அனுப்புவதாக உறுதி கூற முடியாது. தபால் தலை அனுப்பினால் மட்டும் திருப்பி அனுப்பப்படும்.

### ஏஜண்டுகள் தேவை.

எமது பத்திரிகைகளை விற்பதற்கு எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை. விபரத்திற்கு எழுதவும்.

விலாசம்:— மானேஜர்,
**சித்தன்,**
பழனி S. I.

Regd. No. M. 3210.


எவர்! எவர்!!

# இளமையை விரும்பாதார்?

தளர்ந்தவயதினரும், மெலிந்த உடலினரும்
இழந்த பலமடையச் செய்வது
மகானருளால் கிடைக்கப்பெற்ற எமது
சிறந்த ஔடதமே!

Permanent Cure.



Cure Guaranteed.

# தங்கபஸ்பம்.

நோயுற்றவர், நோயற்றவர் இருதரத்தினரும்
உட்கொள்ளலாம்.
தேகசுகம், திடகாத்திரம், நாதபுஷ்டி
அளிப்பதில் இணையற்றது.
24-நாள் பஸ்பம் விலை ரூ. 10—0—0.

## மலையப்பசாமி வைத்தியசாலை,

பிராஞ்சு:- 1-54, அருணசல நாய்க்கன் தெரு,
சிந்தாத்திரிப்பேட்டை, மதராஸ்.


Edited. Printed & Published by Dr. C. P. Sami
at the Nityananda Press, Palni.